S. Nadarajah
Publisher

உங்கள் தேவைக்கான

சாப்புச் சாமான்கள், புட்டி மருந்துகள், பால் உணவுகள், டின் ஆகார வகைகள், இங்கிலிஷ் பிஸ்கெட்டுகள் ஆகியவை எங்களிடம் மொத்தமாகவும் சில்லறையாகவும் நியாயமான விலையில் கிடைக்கும்.

கே. எம்.
அரிசிமியாப் பிள்ளை & சன்ஸ்,
347, மெயின் ஸ்டிரீட்,
கொழும்பு.
டெலிபோன்: 4586

Telegrams: 'SUYANTIRAN' COLOMBO

சுதந்திரன்

THE "SUTANTIRAN."

TAMIL DAILY OF THE TAMIL SPEAKING PEOPLE)

REGISTERED AS A NEWSPAPER AT THE G. P. O.

இலங்கையினதும் இலங்கைவாழ் தமிழ்ப் பேசும் மக்களதும் சுதந்திரத்திற்காக வெளிவருவது.

அறிவிப்பு

எங்கள் "த. பி சொக்கலால் ரம்சேட் பீடி" இலங்கை கவர்ன்மென்டின் இறக்குமதித் தீர்வை அதிகப்படுத்தப்பட்டதின் காரணமாக, 2-12-47ல முதல், 34,560 பீடிகள் கொண்ட மூட்டை 1க்கு ரூ. 285 விகிதம் விற்பனை செய்து வருகிறோமென்பதையும், மன் 15-8-47 சுதந்திர விழாவன் போது ஏற்படுத்திய பிரகாரம் கமிஷன் கொடுக்கப்படுமென்பதையும் எமது வாடிக்கையாளர்களுக்கும் அபிமானிகட்கும் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

பிராஞ்ச மேனேஜர்:-
V. S. சுப்பையா
த. பி. சொக்கலால் ரம்சேட் பீடி கம்பேனி,
98, மேட்டுத் தெரு, கொழும்பு.
29-12-47

Phone: 3411

புத்தகம் 1 | கொழும்பு, சர்வஜித்து வரு மார்கழி மீ 16ல புதன்கிழமை — Colombo, December, 31, 1947 — ஹிஜிரி 1367 ஸபர் பிறை 18 | இதழ் 209

கடற்படைப் பயிற்சி ஸ்தாபனங்களை அமைக்க இந்திய சர்க்கார் திட்டம்

2 கோடி ரூபாயில் கட்டப்பட்ட பிரிட்டிஷ் யுத்தக் கப்பலை வாங்க முடிவு

அடுத்த வருஷம் இந்திய கடற்படையில் 3 நாசகாரிகள் சேர்க்கப்படும்

புதுடில்லி, டிச. 27

'எச். எம். எஸ். அச்சிலிஸ்' என்ற 2000 டன் லீன்டர் வகுப்பு யுத்தக்கப்பலை இந்திய கடற்படைக்கு மாற்றித் தருவது பற்றி இந்திய சர்க்கார் பிரிட்டிஷ் சர்க்காருடன் ஏற்பாடு செய்துள்ளதாக சர்க்கார் பத்திரிகையின் அறிக்கையொன்று கூறுகிறது.

மூன்று நவீன நாசகாரிகளை வாங்குவதற்கும் பேச்சு வார்த்தைகள் நடை பெறுகின்றன. இது 1948 கடைசிக்குள் முடியுமென்று நம்பப்படுகிறது.

நவீன கடற்படைப் பயிற்சிக் கழகம்

இந்தியாவில் நவீன கடற்படைப் பயிற்சிக் கழகங்களை நிறுவ இந்திய சர்க்கார் உத்தேசித்துள்ளது. ஆனால் இக்கழகங்களுக்கு பயிற்சியளிக்க இன்னும் சில நாட்கள் பிடிக்கும்.

பிரிட்டனில் இந்திய கடற்படைக்கு ஏராளமான உத்தியோகஸ்தர்கள், மாலுமிகள் முதலியவர்களுக்குப் பயிற்சி அளிக்க பிரிட்டிஷ் கடற்படை இலாகாவிடம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. 6 உத்தியோகஸ்தர்களும், 60 மாலுமிகளும், பிராங்கோனியா என்ற அருப்புக் கப்பலில் டிசம்பர் மாதம் 13-ம் தேதி பிரிட்டனுக்குப் புறப்பட்டனர். இந்நய கடற்படையைச் சேர்ந்த 'கிருஷ்ணா" "காவேரி" என்ற இருகப்பல்கில் 500 மாலுமிகள் பயிற்சிக்காக டிசம்பர் மாதம் 23-ம் தேதி பிரிட்டனுக்குப் புறப்பட்டனர். 30 உத்தியோகஸ்தர்கள் சமீபத்தில் பிரிட்டனுக்குப் புறப்படுவர். இந்த உத்தியோகஸ்தர்களும் மாலுமிகளும், பிரிட்டிஷ் கடற்படையின் குண்டு பயிற்சிக் கழகம் (எச். எம். எஸ். எக்ஸலென்ட்) மின்சாரக்கழகம் (எச். எம். எஸ். காலிஷவுட்) கப்பல் கட்டும் கழகம் (எச். எம். எஸ் ரொபாட்) டார்பிடோ கழகம் (எச். எம். எஸ். டெபியனஸ்) முதலியவைகளில் பயிற்சிபெறுவர். மேற்கூறிய இரண்டு கப்பல்களின் உத்தியோகஸ்தர்களும் சிப்பந்திகளும் எல்லோரும் இந்தியர்களே.

இந்த கப்பல்களின் கமாண்டிங் ஆபீஸர்கள் ஆர். டி. கித்தாரியும், ஸானியும் ஆவர்.

அடுத்த மூன்று வருஷ காலத்திற்கு, பிரதி வருஷமும் 46 இந்தியர்களுக்குப் பயிற்சியளிக்க பிரிட்டிஷ் கடற்படை ஒப்புக் கொண்டுள்ளது. மூன்று பிரதி வருஷமும் 16 பேர்களே அனுப்பப்பட்டு வந்தனர். தங்களுடைய ஸ்தாபனங்கள் இன்னும் பூர்த்தி பெருமல் நிர்மிக்கப்பட்டு வருகையிலேயே பிரிட்டிஷ் சர்க்கார் இந்த வசதிகளைக் கொடுத்ததற்கு இந்திய சர்க்கார் அதன் பாராட்டுதலை தெரிவிக்கிறது.

"அச்சலிஸ்"

"அச்சலிஸ்" என்ற இந்த பிரிட்டிஷ் யுத்தக் கப்பல் பிரசித்தி பெற்றதாகும். யுத்த ஆரம்பத்தில் பிளேட் நதியில் நடைபெற்ற சண்டையில் ஜெர்மன் போர்க் கப்பல் கிராப்ஸபீயை நாசமாக்க 'அச்சலிஸ்' உதவியது. இது 1933ல் இரண்டு கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டது. இதில் 6 அங்குல பீரங்கிகளில் 6 ம், 4 அங்குல விமான எதிர்ப்புப் பீரங்கிகளில் 8 ம், 21 அங்குல டார்ப்பிடோ டியூபுகளில் 8ம் பொருத்தப்பட்டுள்ளன. இதன் வேகம் 325 நாட்கள். 30 உத்தியோகஸ்தர்களும், 750 மாலுமிகளும் இக்கப்பலுக்கு உண்டு. இவர்களில் சிலர் பிரிட்டனில் பயிற்சி பெறுகின்றனர், மற்றவர்கள் அடுத்த சில வாரங்களில் பிரிட்டனுக்குச் செல்லுவர்.

இக் கப்பல் 1948 இகையுதிர் காலத்தில் இந்தியாவுக்குவரும்.

அமெரிக்க விமானம் நொருங்கி வீழ்ந்தது

இருவர் மரணம், ஒருவர் படுகாயமடைந்தார்

நேப்பிள்ஸ், டிச. 29

அமெரிக்க விமானந் தாங்கிக் கப்பலில் இருந்து புறப்பட்ட கெலிகோப்டர் விமானம் ஒன்று நேப்பிள்ஸ நகர சுற்றுபுறத்துக்குச் சமீபத்தில் வருகையில் நொருங்கி வீழ்ந்தது காரணமாக அவ்விமானத்திலிருந்த இருவர்கொல்லப்பட்டனரென்றும் ஒருவர் படுகாயமடைந்தாரென்றும் கூறப்படுகிறது. விமானத்தில் தீப்பிடிக்காவிடினும் முற்றாக நொருங்கிவிட்டதென்றும் அமெரிக்க அதிகாரிகள் ஸ்தலத்தில் நின்று இறந்தவர்களை அடையாளம் கண்டுபிடித்தனர் என்றும் கூறப்படுகிறது.

(ராய்ட்டர்)

நொருங்கிய விமானத்திலிருந்த ரேடியம்

தேடிக் கண்டுபிடிக்க ஏற்பாடுகள்

ஷாங்கை, டிஸ, 29

கடந்த திங்கட்கிழமை நொருங்கி வீழ்ந்த பெல்ஜியன் விமானத்திலிருந்த ரேடியம் காணாமல் போய்விட்டது சம்பந்தமாக விசாரணை நடத்த மேற்கு ஜூனன் மாகாணத்தின் தலைநகரான கும்மிங்கிலுள்ள பிரஞ்ச அதிகாரி ஏற்பாடுகள் செய்துள்ளாரென பெல்ஜிய அதிகாரிகள் இன்று தெரிவித்தனர். இந்த ரேடியம் பற்றிய தகவல்களைக் கொடுப்பவர்களுக்கு பரிசு வழங்கப்படுமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ராய்ட்டர்)

ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி பண்டிட் டெஹ்ரான் வந்து சேர்ந்தார்

டெஹ்ரான், 29

மாஸ்கோவுக்குச் செல்லும் வழியில் மாஸ்கோவின் இந்திய ஸ்தானிகர் ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி பண்டிட் இன்று விசேட விமானம் மூலமாக இங்கு வந்து சேர்ந்தார். இவர் நாளை அதிகாலையில் மாஸ்கோவுக்குப் புறப்படுவார். (ராய்ட்டர்)

கிறிஸ்மஸ் விடுமுறையில் ரயில்வேயில் நெருக்கடி

தகுந்த முன்னேற்பாடுகளால் நிலைமை சமாளிக்கப்பட்டது

கொழும்பு, டிச. 30

கிறிஸ்மஸ் தினத்துக்கு முதல் நாள் (24-ந் தேதி) ரயில்வேயின் எல்லா ஸ்டேஷன்களிலும் அதிக நெருக்கடியாகவே இருந்ததென்றும் எல்லா அதிகாரிகளும் கூடியளவு அதிகமாகவே நிலைமை நெருக்கடியைச் சமாளிக்க வேலை செய்தனர் என்றும் ஒரு ரயில்வே அதிகாரி கூறினார். இதற்கு முன் இது போன்ற நெருக்கடி ஏற்பட வில்லை யென்றும் இம்முறை எடுக்கப்பட்டிருந்த தகுந்தமுன்னேற்பாடுகளால் நிலைமை நெருக்கடி தீர்க்கப்பட்ட தென்றும் ரயில்வே அதிகாரிகளை விட ரயில் போக்கு வரத்துக்குப் விசேட ஏற்பாடுகளும் செய்யப் பட்டிருந்தனவென்றும் அதிகாரி தெரிவித்தார்.

இம்முறை கிறிஸ்மஸ் விடுமுறைக்குப் பிரயாணம் செய்தவர்களை விட குறைப் பார்க்கச் சென்றவர்கள் தொகையும் நெருக்கடிக்குக் காரணமாக இருந்ததென்று அவர் கூறினார். எல்லா ரயில் பாதைகளிலும் விசேட ரயில்கள் போக்கு வரத்துக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன வென்றும் பிரயாணிகளின் சௌகரியங்களுக்காக அதிகாரிகள் தகுந்த முறைப்படி நடந்து கொண்டனர்என்றும் அவர்மேலும் தெரிவித்தார்

அரசாங்க உபகாரச் சம்பளம் பெறுபவர்கள்

நிதி மந்திரிக்கு மகஜர்

கொழும்பு, டிச 30

நிதிமந்திரிக்கு இலங்கை அரசாங்க உபகாரச்சம்பளம் பெறுபவர்கள் சங்கம் ஒரு மகஜர் அனுப்பியுள்ளது. அம் மகஜரில் 11 வருடம் அல்லது 15 வருடம் வேலை செய்தவர்களுக்கு முழு உபகாரச் சம்பளம் அளிக்கப்பட வேண்டுமென்றும் விதவைகள், அனுதைகள் நிதிக்கு உதவப்பட்ட பணங்களை மனுவியரில்லாதவர்களுக்கும்பிள்ளைகளில்லாதவர்களுக்கும் அப்படியே திரும்பவும் கொடுக்கப்பட வேண்டுமென்றும் அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்கு வழங்கப்படும் யுத்த படிச் செலவுகளைப்போல உபகாரச்சம்பளம் பெறுபவர்களுக்கும் யுத்தபடிச் செலவுகள்கொடுக்கப்படவேண்டுமென்றும் இப்பொழுதுள்ள சம்பளத்திட்டப்படி உபகாரச் சம்பளம் அளிக்கப்படுவது நிறுத்தியைக்கப்பட வேண்டுமென்றும் இதுவரை யுத்த படிச் செலவுகளில் குறைவாகக் கொடுக்கப்பட்டபடிக்கு படிச் செலவுகளை அரசாங்கம் கொடுக்க வேண்டுமென்றும் கோரிக்கைகள் தெரிவிக்கப் பட்டுள்ளன.

அதிக வெங்காயம் உருளைக்கிழங்குகள்

கொழும்பு, டிச. 30

இப்பொழுது உருளைக்கிழங்குகளும் வெங்காயமும் (சிகப்பு, பம்பாய்) பொதுமக்களுக்கு சங்கக் கடைகள் மூலம் கிடைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. கட்டுப்பாட்டு விலைக்கு (சிவப்பு ராத்தல் 12 சதம், பம்பாய் வெங்காயம் ராத்தல் 13 சதம்) இவை விற்கப்படும் இப்பொருள்கள் தட்டுப்பாடு காரணமாக கள்ள மார்க்கட்டு வியாபாரிகள் இவற்றை ராத்தல் ரூ. 2. ரூ. 1-75 ஆக விற்பனை செய்துள்ளனர்.

"பேச்சளவில் அஹிம்சை வேண்டாம்; செயலில் காட்டுங்கள்"

சிறுபான்மையினரைத் துன்புறுத்த வேண்டாம்

கிராம நிர்வாகங்கள்பற்றி மகாத்மா ஜி

புதுடில்லி, டிச. 29

காந்திஜியின் பிரார்த்தனைக் கூட்டம் சம்மல்கா என்னும் கிராமத்தில் நடைபெற்றது காந்திஜி இந்த கிராமத்துக்கு வந்ததும் கிராம வாசிகள் அவருக்கு மாலை சூட்டி வரவேற்றனர். அவருக்கு ஒரு வரவேற்பு பத்திரமும் வாசிக்கப்பட்டது. பிரார்த்தனை நடத்துவதற்காகத்தான் தாம் சம்மல்கா கிராமத்திற்கு வந்ததாகவும் இந்தக் கூட்டத்தில் மாலை சூட்டுதல், வரவேற்பு பத்திரம் வாசித்தல், உரத்த சப்தத்தில் கோஷங்களிடுதல் முதலியன கூடாது என்றும் காந்திஜி தமது பிரசங்கத்தில் குறிப்பிட்டு விட்டு மேலும் கூறியதாவது:-

வாயளவில் அஹிம்சை பேசவேண்டாம்

"நீங்கள் எனக்கு வாசித்த அளித்தவரவேற்புப்பத்திரத்தில் அஹிம்சையைப் பற்றியும குறிப்பிட்டிருக்கிறீர்கள். ஆனால் அவற்றை நடை முறைக்குக் கொண்டு வராமல் வெறும் வாயளவில் பேசிக்கொள்வதில் அர்த்தமில்லை. அஹிம்சையைப் பற்றியும சத்தியத்தைப் பற்றியும் வெறும் வாயளவாகப்பேசுவதால் தீமைதான் ஏற்படுகின்றது"

ஒருவருடைய எண்ணங்களுக்குத் தகுந்தபடி அவருடைய செய்கைகளும் இருக்க வேண்டும். அஹிம்சையென்று வாயால் சொல்லிவிட்டு மைனாரிட்டி வகுப்பினரை விரட்டுவதும் அவர்களை கேவலமாக நடத்துவதும் அஹிம்சையாகாது. சுதந்திரம் கிடைத்து விட்டதென்ருல் மக்கள் தங்களுக்குத் தோன்றுவதை யெல்லாம் செய்து விடலாம் என்று அர்த்தமல்ல. கொலை பாதகங்கள் செய்வதற்கும் பொய்கள் சொல்வதற்கும் எங்களுக்கு சுதந்திரம் கிடைக்க வேண்டும் என்று யாராவது பிரார்த்தனை செய்யலாமா? இப்படி பிரார்த்தனை செய்தால் அது கடவுளுக்குப் பதிலாக சாத்தானிடம் சரணடைவதாகும்."

கிராம பஞ்சாயத்தின் கடமை

சம்மல்கா கிராமத்தில் பஞ்சாயத்து நிறுவப்பட்டிருப்பது பற்றி காந்திஜி தமது வாழ்த்துக்களை தெரிவித்துவிட்டு மேலும் கூறியதாவது:-

ஒரு பஞ்சாயத்து செய்யவேண்டிய வேலைகளை நீங்களும் செய்ய வேண்டும். இல்லாவிட்டால் சமயத்தை வீணுக்கிய பலன்தான் உங்களுக்குக் கிடைக்கும். பண்டைக் காலத்தில் சினு. முதலியதேசங்களிலிருந்து பல யாத்திரீகர்கள். அறிவை நாடி இந்தியாவுக்கு வந்தனர். அந்த நாட்களில் அவர்கள் எவ்வளவோ கஷ்டங்களை அனுபவித்து இந்தியாவுக்கு வந்ததற்குக் காரணம் உண்டு. இந்தியாவில் அந்தக் காலத்தில் திருட்டு நடந்ததில்லை என்று இந்த யாத்திரீகர்கள் கூறுகின்றனர். அக்காலத்தில் இந்தியர்கள் நேர்மையுடையவர்களாகவும் நல்ல உழைப்பாளிகளாகவும் இருந்தார்கள். திருடர்களுக்குப் பயந்து அவர்கள் தங்கள் வீட்டின் கதவுகளைப் பூட்டிப்போட வில்லை. இப்போது இருப்பது போன்ற பல்வகை ஜாதிப் பிரிவினைகள அந்த நாளில் இடையாது.

இனிமேலும் இந்தியர்களுக்கு அதே நேமையும் உறசாகமாக உழைக்கும் தன்மையும் ஏற்பட வேண்டும். இது கிராமப் பஞ்சாயத்துகளின் கடமை பாகும்.

தகராறுகளும் சச்சரவுகளும் செய்யாமலிருக்கும்படியான அறிவை மக்களுக்குப் புகட்டுவது கிராமப் பஞ்சாயதின் அலுவலாகும். பணச் செலவு எதுவும் இலலாமல் தகராறுகளை பஞ்சாயத்துமூலம் தீர்த்து வைக்க முடியும். கிராமங்களில் பஞ்சாயத்துகளை ஏற்படுத்தி விட்டால் ராணுவத்திற்கும் போலிஸ் படைக்கும் தேவையே ஏற்படாது.

கன்றுகாலிகளைக் கவனிக்க வேண்டும்

"கன்று காலிகளைக் கிராமப் பஞ்சாயத்தினர் அபிவிருத்தி செய்து பால் உற்பத்தியை அதிகரிக்கவேண்டும். இன்று இந்தியா கன்றுகாலிகளைச் சரியானபடி வளர்ப்பதில்லை. எனவே அவைகள் நாட்டில் ஒரு பளுவாகக் காணப்படுகின்றன. முஸ்லிம்கள் பசுக் கொலை செய்கிறார்கள் என்று குற்றம் சாட்டுவது மடமையாகும். ஹிந்துக்கள்தான் கன்று காலிகளை ஒவ்வொரு அங்குலமாக வதைத்துக் கொல்லுகிறார்கள் என்று நான் கருதுகிறேன். ஒரு ஜீவராசியை வதைத்துக் கொலலுவது அதை ஒரேயடியாகக் கொல்லுவதைவிட கொடூரச் செயலாகும்.

தானிய உற்பத்தியை அதிகரிப்பதும் கிராமப் பஞ்சாயத்துகளின் கடமையாகும். நிலங்களுக்கு நல்ல முறையில் உரங்கள் இட்டு உற்பத்தியைப் பெருக்கவேண்டும். எல்லா அழிவு பொருட்களையும் நல்ல உறமாக மாற்றுவது எப்படி என்பதுபற்றி சமீபத்தில் டில்லியில் நடந்த மகாநாட்டில் விவாதித்துக் கூறியிருக்கிறார்கள். கிராமங்களையும் சுற்றுப் புறங்களையும் சுத்தமாக வைத்திருக்கவேண்டும். மக்கள் எல்லோரும் நிடகாதகிரர்களாகவும் சுத்தமுள்ளவர்களாகவும் இருக்கவேண்டும். தேகத்தை மாததிரம் சுத்தமாக வைத்திருந்தால் போதாது. மனமும் சுத்தமாக இருக்கவேண்டும்.

உண்மையான சுதந்திரத்தை நிருபிப்பீர்கள்

நீங்கள் உங்கள கிராமத்தில் சினிமா கொட்டகை வைக்க மாட்டீர்கள் என்று நம்புகிறேன். சினிமா மூலம் மக்களுக்கு கல்வி புகட்ட முடியும் என்று சிலர் சொல்லுகிறார்கள் இது ஒரு நாள் உண்மையாகக் கூடும். ஆனால் தற்சமயம் சினிமாக்களால் மக்களுக்கு பெரும் தீங்குகள் ஏற்படுகின்றன. மதுபானங்கள் அருந்துவதை மக்கள் கைவிட வேண்டும். தீண்டாமையை ஒழிக்க வேண்டும். ஹிந்துக்கள், முஸலீம்கள், சீக்கியர், பார்ஸிகள், கிறிஸ்தவர்கள் எல்லோரும் சகோதரர்கள் போல் நடந்துக்கொள்ள வேண்டும். நான் மேலே கூறியவை எல்லாவற்றையும் கடைமுறைக்குக் கொண்டுவந்துவிட்டீர்களானல் உண்மை சுதந்திரம் என என்பதை நீங்கள் நிருபிக்க முடியும். அப்போது இந்தியாவில் இதர இடங்களில உள்ள மக்கள் எல்லாரும் உங்களுடைய கிராமத்தை வந்து பார்வையிட்டு லாப மடைவார்கள். கடவுள் உங்கள் முயற்சிகளுக்கு வெற்றியளிப்பாராக.

இத்தாலிய மாஜிமன்னர் உம்பேர்ட்டோ அலெக்ஸாந்திரியா சென்றார்

விளபன், டிச. 29

இத்தாலிய மாஜி அரசர் உம்பேர்ட்டோ இன்று அதிகாலையில் விமானத்தில் அலெக்ஸாந்திரியா சென்றார். இவரது தந்தையான மாஜிமன்னர் விக்டர் எமானுவேல் நேற்று இருதய வியாதி காரணமாக அங்கு மரணமடைந்திருந்தார். இவருடன் ஜெனரல் கிராஸியானியும் உடன சென்றார்.

பாரசீக மந்திரி சபை

ஜாபிதாவை பிரதமர் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார்

டெஹ்ரான், டிச. 29

ஒரு வாரத்திறகு முன் நியமிக்கப்பட்ட பாரசீக பிரதமர் இப்ராஹிம் ஹாகிமி இன்று தமது மந்திரி சபையினர் ஜாபிதாவை பாராளுமன்றத்திடம் சமர்ப்பித்தார். தமது திட்டத்தில் அனவசியமான செலவுகளை குறைப்பதும், பாதுகாப்புப் படையை பலப்படுத்துவதும், நீதியை நிலை நாட்டுவதும் அண்னிய நாட்டு வர்த்தக ஆதிக்கத்தை திருத்தியமைப்பதும், சுகாதாரம், கல்வி முனிஸிபல் விஷயங்கள் ஆகியனவற்றில் மாகாணங்களுக்கு ஆதிக்கத்தை அளிப்பதும், ஐக்கிய நாடுகளுக்கு முழு உதவி யளிப்பதும்ஆகிய இடம் பெற்றுள்ளனவென்று பிரதமர் கூறினர்

(ராய்ட்டர்)

இனந்தெரியாத இடத்துக்கு தொண்டர்கள் செல்கின்றனர்

டாக்டர்கள், நர்ஸஸள் ரஜாக்கள், சர்க்காரால் ரத்து

பாக்தாத், டிஸ. 29

இராணுவ அதிகாரிகள், டாக்டர்களை, நர்ஸ்களை ஆகியோரின் ரஜாக்களை ஈராக் சர்க்கார் இன்று ரத்துசெய்துவிட்டதாக நம்பத தகுந்த இடத்திலிருந்து அறியப்படுகிறது. கடந்த மூன்று நாட்களாக பெயர் குறிப்பிடப்படாத இடத்துக்கு தலைநகரிலிருந்துதொண்டர்கள் செல்வதாக பாலஸ்தீன பாதுகாப்புக் கமிட்டி தெரிவிக்கின்றது. பாத்தாது நகரிலுள்ள பள்ளிவாசல்களில் டாக்டர்களால் பரிசோதிக்கப்பட்ட (கடந்த 24 மணிநேரத்தில்)தொண்டர்களில் மாஜி ராணுவத்தினர், மகூஜாதியினர், மாணவர்கள் முதலியோர் இருக்கின்றனர் என்று கூறப்படுகிறது.

(ராய்ட்டர்)

உங்கள் இடங்களிற் மங்களகரமான சூரியன்

மெய்கண்டான்

REGD: 7473

திருக்குறட் கலண்டர்

இப்பொழுதே வாங்குங்கள்; பிற்தினல் கிடைப்பதரிது.

தேதி ஒற்றைகளில் மெய்கண்டான் பிறேஸ் படங்களில மங்களகரமான சூரியன் கவனித்து பார்த்து வாங்குங்கள்.

இனும்! இனும்! இனும்!

அநன்சேர்ந்த நெஞ்சினருக்கில்லை இருன்சேர்ந்த இன்னு வுலகம் புகல்

என்னும் திருக்குறளுள்ள எங்கள் கலண்டருக்கு No. 1 டயறி இலம்-குறித்த குறளுள்ள தேதி ஒற்றையில் எங்கள் அச்சேர் திரசாலையின் அடையாளமும் உள்ளது. அத்தேதி ஒற்றையைக் கிழித்து அனுப்பினுல் டயறி அனுப்பலாம்.

மெய்கண்டான் தமிழ்டயறி Nos: 1 & 2.

மிகவும் பிரயோசனமுள்ளன. கையடக்கமான அளவும் அழகும் உறதியும் உள்ளன.

கொழும்பில் எங்கள் கிளை நிலையத்தில் சில்லறைக்குக் கீழ்க்கண்ட விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்

1 சிவப்பு 1க்கு ரூபா 1-75.

பிரபல வியாபாரிகளிடம் எங்கும் கிடைக்கும்

மெய்கண்டான் அச்சியந்திரசாலை,
மட்டுவில், சாவகச்சேரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரன்

THE "SUTANTIRAN"

194 ஏ, நட்டாரத் தெரு, கொழும்பு.
போன்: 3611.

சர்வசித்து ஐ மார்கழி மீ 16 உ
புதன்கிழமை

அரசியல் சுதந்திரமும் தேச சரித்திரமும்

சமீபத்தில் பம்பாயில் இந்திய சரித்திரக் காங்கிரஸின் பத்தாவது மகாநாடு நடைபெற்றது. பம்பாய் பிரதம மந்திரி திரு பி. ஜி. கெர் அதை ஆரம்பித்து வைத்தார். அவர் தமது தலைமைப் பேருரையில் அந்நியர்கள் இந்திய சரித்திரத்தையே அறியாது இந்தியரை அகௌரவப்படுத்தும் முறையில் சரித்திரப் புத்தகங்கள் எழுதியிருப்பதாகக் கூறியுள்ளார். இக்காரணத்தால்தான் இந்தியாவில் இன்று அமைதி இல்லையென்றும், இந்த நிலைமை மாறுவதற்கு சரித்திரத்தை உண்மை வழியில எழுதிக்கொள்ள வேண்டும் என்றும் திரு கெர் புத்திமதி கூறியிருக்கின்றார்.

திரு கெர் கூறியது முற்றிலும் வாஸ்தவதில் உண்மையாகும். இந்திய சரித்திரத்தை எழுதியவர்கள்சேகரித்தவர்களாவரும் பிரிட்டிஷார் ஆகும். அவர்கள் தங்கள் ஆதிக்கமும் ஆட்சியும் இந்தியாவில் என்றென்றும் இருக்கும் முறையில்தான் சரித்திரத்தை எழுதினார்கள் சுதந்திரம் பெற்ற இந்தியா அந்நிலைமையை மாற்ற முற்படுவது சுபசகுனமாகும்.

இலங்கையில் உள்ள எமக்கும் திரு கெரின் பேச்சுகள் பொருத்தமானதாகும். இந்தியாவில்போன்றே இங்கும் பிரிட்டிஷார் சரித்திரத்தை உண்மைக்கு மாறுக அச்சிட்டு வெளியிட்டிருக்கின்றனர். அதிலும் இலங்கைத் தமிழ் மக்களின் சரித்திரம் முற்றுகப் புறக்கணிக்கப்பட்டிருக்கின்றது. யாழ்ப்பாணத்தில் ஆண்ட மன்னர்களின் சரித்திரத்தை அறியக்கூடியதாகவில்லை. முற்றுக ஒழிக்கப்பட்டேயிருக்கின்றது. கண்டியில் ஆண்ட எத்தனையோ தமிழ் மன்னர்களை ஒன்றில் வேண்டுமென்றே சிங்களவராக மாற்றியுள்ளார்கள்; அல்லது கொடுங்கோலர்களாகக் காட்சியளிக்கும் விதத்தில் எழுதப்பட்டிருக்கிறார்கள்.

இந்த நிலைமை மாறவேண்டும். தமிழ் சிறார்கள்-வருங்காலத் தமிழ் உலகின் மன்னர்கள் தம் மூதாதையர் கொடுங்கோலர் என்னும் எண்ணங்கொள்ளாத முறையில் சரித்திரம் எழுதப்படல்வேண்டும். இப்படி நாம் சொல்லும்பொழுது உண்மைக்கு மாறுக எழுதும்படி சொல்லவில்லை. ஆதாரத்துடன் உள்ளதை உள்ளவாறே எழுத வேண்டுமென்றே வேண்டுகின்றோம்.

சிங்கத்திற்குப் பிறந்தான் சிங்கபாகு; பூதத்தைக்கொண்டு புத்தூர் வற்றாநிலையை வெட்டுவித்தான் பூதத் தம்பி என்னும் பொய்யுரைகளை இன்னும் தொடர்ந்து சொல்லிவரவேண்டாம் என்றே கேட்கின்றோம்.

இலங்கையைச் சிங்களவர்களும் ஆண்டிருக்கிறார்கள், தமிழரும் ஆண்டிருக்கிறார்கள் இந்த உண்மையை கட்சி, பிரதி கட்சி முறையல்லாது உண்மை வழியில வெளியிடப்படல் வேண்டும்.

1815-ம் ஆண்டில் கண்டி அரசாங்க பாஷை, தமிழாக இருந்ததாகச் சொல்லப்படுகிறது. அதற்குச் சான்றாக அப்பொழுது பிரிட்டிஷாருடன் ஏற்படுத்திக்கொண்ட ஒப்பந்தம் தமிழில்தான் ஸ்ரீ விக்கிரம ராஜசிங்காவால் கைச்சாத்திடப்பட்டதாம். இப்பிரதி லண்டனில் இருந்ததாகக் கூறப்படுகிறது. இப்பொழுது அது மாயமாக மறைந்துவிட்டது போல் காணப்படுகின்றது.

இதை மறைத்ததன் காரணத்தை எவரும் இலகுவில் அறிந்துகொள்ளலாம்.

சிங்களத் தமிழ்ப் பெரியார்கள் இலங்கையின் உண்மைச் சரித்திரத்தை எழுத முன்வருவார்களா? முன் வருபவர்களுக்கும் இன்றைய அரசாங்கம் உதவி செய்யுமா?

மூக்டான் நகரில் பிரவேசிக்க கமியூனிஸ்டுகள் முயற்சி

இரவெல்லாம் யுத்த கோஷங்கள்

5 லக்ஷம் நகர வாசிகள் தூங்கவில்லை

வடமத்திய சீனத்தில் கமியூனிஸ்டுகளின் மும்முர தாக்குதல்கள்

நாங்கிங, டிச. 29

மஞ்சூரியாவின் கேந்திர ஸ்தானமான மூக்டானை நோக்கி கமியூனிஸ்டு துருப்புகள் வந்து பாயின்றன. சீன அரசாங்க விமானப் படைகள் அவர்களை எதிர்த்துப் பெரும் தாக்குதலை நடத்துகின்றன. பலமான எதிர்ப்புக்கிடையே கமியூனிஸ்டு துருப்புகள் கடந்த 24 மணி நேரத்திற்குள் மேலும் முன்னேறிக் கொண்டு வருகின்றன. சீன அரசாங்கத் துருப்புகளின் அணிகளைத் துளைத்துக் கொண்டு மூக்டான் நகருக்குள் பிரவேசிக்க கமியூனிஸ்டு துருப்புகள் முனைந்து கொண்டிருக்கின்றன. யுத்த கோஷங்களைக் கேட்டு மூக்டானிலுள்ள 5 லக்ஷம் ஜனங்கள் இரவெல்லாம் தூங்கவில்லை. தண்ணீர் பனிக்கட்டியாக இறுகும் அவ்வளவு குளிரில் இரவில் அகதிகள் தீப்பந்தங்களைப் பிடித்துக் கொண்டு நகருக்குள் நுழைந்தனர்.

வட சீனத்தில ஹோப்பி மாகாணத்தைக் கைப்பற்ற கமியூனிஸ்டு தளபதி ஒரேயடியாக தனது 5 டிவிஷன் படைகளையும் யுத்தத்தில் ஈடுபடுத்தியிருக்கிறார்.

மத்திய சீனத்தில் கமியூனிஸ்டு தளபதி மீண்டும் படையெடுத்து யாங்சே நதிப் பிரதேசத்தின் முக்கிய பகுதிகளைக் கைப்பற்ற முனைந்திருக்கிறார். இதை சமாளிக்கத்தான் சியாங்கை ஷேக் ஹாங்கௌ சென்ற தளபதிகளுடன் கலந்து ஆலோசனை செய்தார்.

கானடா ஆயுதங்கள்

ஒட்டாவா, டிச 30

சீனத்திற்கு கானடா ஒரு கோடி டாலர் பெறுமதியுள்ள ராணுவ ஆயுதங்களைக் கொடுத்துதவ இரு நாடுகளுக்குமிடையே ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளது 1945-ம் வருடத்திய சீனு-கானடா விமான ஒப்பந்தத்திற்குட்பின் இந்த ஒப்பந்தமும் செய்யப்பட்டிருக்கிறது. அதன்படி கானடா இன்று ஆயுத உற்பத்திசாலையொன்றைக் கழற்றி இயந்திரங்களை சீனத்துக்கு ஏற்றுமதி செய்தது. இன்னும் வெடி விமானங்கள், விமான ராணுவ ஆயுதங்கள், விமான நிலைய ஆயுதங்கள் முதலியவைகளை அனுப்பி வைக்கும்.

தொழிலாளியின் சம்பளம் கொடுக்காத முதலாளி

ரூ. 350 அபராதம் செலுத்தினார்

மட்டக்களப்பு, டிச. 30

கோறளைப்பத்தில் உள்ள கந்தையா என்னும் தோட்ட முதலாளி தம் கீழ் வேலை செய்யும் தொழிலாளியான வர்ணமணிக்குச் சம்பளம் கொடுக்கவில்லை என்றும், குறைந்தபட்ச சம்பளமான ரூ. 1-40 தினசரிச் சம்பளத்தை அமுல் நடத்தவில்லை என்றும் குற்றஞ்சாட்டப்பட்டது.

பிரஸ்தாபக் குற்றச்சாட்டுகளை தொழில் இலாகா இன்ஸ்பெக்டர் வி. சுப்பிரமணியம் கொண்டுவந்தார்.

தொழிலாளிகளை ஏமாற்றும் இவ் வழக்கம் பாரதூரமான குற்றம் என்று கூறி மாஜிஸ்டிரேட் எதிரி மீது முதல் குற்றத்துக்கு ரூ. 100 அபராதம் விதித்ததோடு இரண்டாவது குற்றத்திற்கு ரூ 250 அபராதம் விதித்தார். மொத்த அபராதப் பணம் ரூ. 350 ஆகும்.

இறைச்சியை விலை கூட்டி விற்றார்

ரூ. 25 அபராதம்

மட்டக்களப்பு, டிச. 29

ஆட்டிறைச்சி விலையை ரூ. 1-50 ஆகக் கூட்டிவிற்ற இறைச்சி வியாபாரி கே. எல். ஜே. ஆப்தின் மீது ரூ. 25 மட்டக்களப்பு மாஜிஸ்டிரேட்டால் அபராதமாக விதிக்கப்பட்டது.

மகாத்மா காந்தியை இலங்கை பிரதமரும் இலங்கை இந்திய ஹை கமிஷனரும் சந்தித்தனர்

அரை லட்சம் வார்த்தைகளடங்கிய வாக்குமூலம்

டோஜோ வழக்கு விசாரணை

டோக்கியோ, டிச 29

யுத்தகாலத்தில் ஜப்பான் பிரதம மந்திரியாக இருந்த ஜெனரல் டோஜோ மீது தொடரப்பட்ட வழக்கு சர்வ தேச யுத்தக் குற்றவாளிகள் விசாரணை சபையில் விசாரிக்கப்பட்டது. அப்பொழுது இன்ற டோஜோவின் வழக்கறிஞர் அரை லட்சம் வார்த்தைகளடங்கிய டோஜோவின் வாக்குமூலத்தை விசாரணைசபையில் நீண்ட நேரமாக வாசித்தார். ஜப்பான் யுத்தக் காரியாலயக் கட்டிடத்தில் நடைபெற்ற இவ் விசாரணையைக் கவனிக்க ஏராளமான ஜனங்கள் கூடியிருந்தனர். ஜப்பான் பத்திரிகைகள முதல் பக்கத்தில் இவ்வாக்கு மூலத்தைப் பிரபலமாகப் பிரசுரம் செய்தன.

மனைவியைத் தாக்கியதால் கோபம்

ஒருவர் மரணத்தில் முடிந்தது

அவிசாவளை, டிச. 30

பொடி சிங்கோ, ஜமீடன் கூரே என்னும் இருவர் குடித்துவிட்டு நோனு என்னும் ஓர் பெண்ணைத் தாக்கியதாகவும் அதனால் கோபமடைந்த அவளது கணவன் மானிஸ சிங்கோ ஸதலத்திற்கு வந்து பிரஸ்தாபகர்கள் இருவரையும் கத்தியால் குத்திவிட்டு ஓடிப்போனதாகவும் தெரிகிறது.

இவர்களில் பொடி சிங்கோ மாண்டு போனான். ஜமீடன் சிங்கோ ஆபத்தான நிலையில் இருந்து வருகிறான்.

இச்சம்பவம் காரணமாக மானிஸ சிங்கோ மீது கொலைக் குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது.

ஜெரூசலேம் கலகம்

13 அராபியர், 3 பிரிட்டிஷார் கொலை

ஜாபா நகரை யூதர் தாக்கினர்

ஜெரூசலேம், டிச. 30

யூத பயங்கரப் புரட்சிப் படையைச் சேர்ந்த கடற்படை வீரர்கள் அராபியர் நகரான ஜாபாவின் துறைமுகத்தில் இரவில் இறங்கி அராபிய ஹோட்டலைத் தாக்கினர். 40 யூதர்கள் இருந்தனர். சில பணி நேரத்திற்குமுன் அராபியர்கள் யூத நகரான டெலஅவிவ் நகரைத் தாக்கியதற்குப் பதில் பழிவாங்கும் பொருட்டு அவர்கள் ஜாபா நகரைத் தாக்கினர். யூத பயங்கரப் புரட்சிக் காரர்கள், ஜெரூசலேமில் முஸ்லிம் பகுதிக்குள பிரவேசித்து வெடிகுண்டு வீசியதால் டாக்ஸி மோட்டார்களிலிருந்த 13 அராபியர்கள் கொல்லப்பட்டனர். இதனை யூதர்களின் டாக்ஸி காரர்கள் ஓட்டலாகதென்று அரசாங்கம் தடை செய்திருக்கிறது. ஆரஞ்சு மார்க்கெட்டிலுள்ள டமஸ்கஸ கோட்டை வாசலில் நடைபெற்ற இச் சம்பவத்தால் ஆத்திரங்கொண்ட அராபியர்கள் வெறி கொண்டிருக்கிறார்கள். கடைகள் எல்லாம் மூடப்பட்டன. அரசாங்க காரியாலயங்களில் வேலை செய்யும் யூத உத்தியோகஸ்தர்கள் தங்களுக்கு பந்தோபஸ்து அளிக்கப்படாவிடில் வேலைக்குச் செல்ல முடியாதென வேலை நிறுத்தம் செய்கிறார்கள். பார்க்கோஸ் பாங்கில் வெடிகுண்டு வீசப்பட்டதில் ஒரு யூத குமாஸதா காயமடைந்ததால் ஜெனரல் போஸ்ட் ஆபீஸில் வேலை செய்யும் யூத அராபிய குமாஸதாக்கள் வேலைக்குச் செல்லவில்லை. ஆரஞ்சு மார்க்கெட்டில் நடைபெற்ற வெடிகுண்டு சம்பவத்தையொட்டி மூன்று பிரிட்டிஷ் கான்ஸ்டபிள்கள் கொல்லப்பட்டனர்.

மீண்டும் நேரு-சேனநாயக்கா சம்பாஷணை

பர்மாவுக்கு பண்டாரநாயக்கா பயணம்

பர்மாவின் பரிபூரண சுதந்திர விழாவில் நெருங்கிய குடியேற்ற நாட்டந்தஸ்து அடையும் இலங்கைப் பிரதிநிதி கலந்துகொள்வார்

இந்தியா-பாகிஸ்தான் ஆடுகள் நனைவதாக பிரிட்டிஷ் ஓநாய்கள் அழுகின்றன

புதுடில்லி, டிச 29

இலங்கை-இந்திய பிரச்னைகளைப்பற்றி நேற்று இந்தியா பிரதம மந்திரி பண்டித நேருவும் இலங்கை பிரதம மந்திரி திரு டி. எஸ். சேனநாயக்காவும் இரண்டு மணி நேரம் கலந்து பேசிய பின் இன்றும் அவர்களிருவரும் சந்தித்துப் பேசினார்கள். இன்று காலை அவர்கள் ஒன்றரை மணி நேரம் இலங்கைக்கும் இந்தியாவுக்குமுள்ள அரசியல் பிரச்னைகள் பற்றி விவாதித்தனர். இன்று பிற்பகலிலும் அவர்கள் மறுபடியும் சந்தித்து சம்பாஷித்தார்கள். நாளையும் அவர்கள் சந்தித்துப் பேசுவார்கள். திரு டி. எஸ். சேனநாயக்கா நாளையும் பண்டித நேருவைச் சந்தித்துப் பேசியபின் இலங்கைப் பிரதம மந்திரி நாளைப் பிற்பகல் கராச்சிக்குப் பயணமாவார்.

இன்று இலங்கைப் பிரதம மந்திரி திரு டி. எஸ். சேனநாயக்காவும் இலங்கையில் இந்திய ஹை கமிஷனராகவுள்ள திரு வி. வி. கிரியும் மகாத்மா காந்தியைச் சந்தித்துப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

பர்மாவுக்கு பண்டாரநாயகா பயணம்

கொழும்பு, டிச. 30

பரிபூரண சுதந்திரம் பெறும் பர்மாவின் சுதந்திர தின வைபவத்தில் கலந்துகொள்ள ஏறக்குறைய குடியேற்றநாட்டந்தஸ்தைப் பெறும் இலங்கையின் ஸ்தாபன சுகாதார மந்திரியான திரு எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயகா இன்று "டெர்பிஷயர்" கப்பலில் ரங்கூனுக்குப் புறப்பட்டுச் சென்றார். அவருடன் அவரது நிரந்தரக் காரியதரிசி திரு ஈ டபிள்யூ. கன்னங்கராவும், அவரது அந்தரங்கக் காரியதரிசி திரு டபிள்யூ. டி. டபிள்யூ. மஹாதந்திரியாவும் சென்றனர். பர்மா சுதந்திர விழாவுக்கு இலங்கையின் பிரதிநிதியாகச் செல்லும் திரு பண்டாரநாயகா, முன்னர் டில்லியில் நடைபெற்ற ஆசிய மகாநாட்டுக்குச் சென்றிருந்தபோது, இப்பொழுது பர்மா அந்நியநாட்டு மந்திரியாக இருக்கும் உடின் டுட்டின் சகோதரரும், பர்மா மந்திரிகள் கொலை வழக்கை இப்பொழுது விசாரிப்பவருமான உசா மின் டைச் சந்தித்துப் பேசியிருக்கிறார். அப்பொழுது உசா மின்ட் பர்மா பிரதிநிதி கோஷ்டித் தலைவராக ஆசிய மகாநாட்டுக்கு விஜயம் செய்திருந்தார். திரு பண்டாரநாயகா ஜனவரி 3-ம் தேதி ரங்கூன் போய்ச் சேருவார். 4-ம் தேதி பர்மா சுதந்திரதினக் கொண்டாட்டத்தில் கலந்துகொள்வார். ஜனவரி 7-ம் தேதி விமான மார்க்கமாகப் புறப்பட்டு கல்கத்தாவிலும் சென்னையிலும் தங்கி 9-ம் தேதி கொழும்பு வந்துசேருவார். அவர் பர்மாவிலிருக்கும் சமயம், பர்மா அரசாங்கம பர்மா வாழ் இந்தியரின் பிரச்னைகள்பற்றி எவ்வித நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறதென்பதை ஆராய்ந்து வருவார். இலங்கை இந்தியர் பிரச்னை சம்பந்தமாக பர்மாவைப் பின்பற்றி எவ்வித நடவடிக்கைகள் எடுக்கலாம் என்பது பற்றியும் ஆராய்ந்து வருவார்.

சர்தார் படேல் கர்ஜனை

காஷ்மீர் போர்

புதுடில்லி, டிச, 29

இன்று டில்லியிலிருந்து 11 மைல் தூரத்திலுள்ள மேஹரௌலி கிராமத்தில் நடைபெற்ற பிரமாண்டமான பொதுக்கூட்டத்தில் இந்தியாவின் உதவிப் பிரதம மந்திரி சர்தார் படேல் பேசியபோது பின்வருமாறு தெரிவித்தார்:-

இந்தியாவின் பாமர மக்கள் வாழ்க்கைநிலைமையை அபிவிருத்தி செய்ய வகுக்கப்பட்டுள்ள திட்டங்களை பெல்லாம் இந்திய அரசாங்கம் தாராளமாகவும் மும்முரமாகவும் நடத்துவதற்கு இந்தியாவில் உள்நாட்டு அமைதியும் வகுப்பு சமரசமும் நிரந்தரமாக நிலவ வேண்டும். குழப்பமான நிலைமை மக்களது நலன்களைப் பாதிக்கும். ஆதலால் போராட்டங்களை நடத்துவதில் நீங்கள் குறுக்கிடாமல் அப்பொறுப்பை அரசாங்கத்திடம்விட்டுவிடுங்கள். இந்தியாவில் உண்மையான பகைவர்களை நாங்கள் எதிர்த்துப் போராடுவோம், கலகங்களால் அரசாங்கத்திற்கு பெருவாரியான செலவு ஏற்படுகிறது. காஷ்மீர் யுத்தத்திற்கு மட்டும் தினசரி 4 லட்சம் ரூபாய் செலவழிகிறதென்பதை நீங்கள் உணர வேண்டும். காஷ்மீரில் நாங்கள் தொடர்ந்து போராட்டத்தை நடத்துவோம். நமது நாட்டில் ஒருஅங்குல நிலத்தைக்கூட மாற்றாருக்கு விட்டுக் கொடுக்கமாட்டோம். பல்லாயிரக் கணக்கான இந்திய துருப்புகள் காஷ்மீரத்திலிருக்கின்றன.

காஷ்மீர் பிரச்னை

காஷ்மீர் மீது படையெடுத்து வரும் எதிரிகளை இந்திய அரசாங்கத்தின் வேண்டுகோளுக்கிணங்கி குறிப்பிட்ட தேதியில் பாகிஸ்தான் பின் வலித்துக் கொள்ளாவிடில், இந்தியாகாஷ்மீர் பிரச்னையை ஐக்கியதேச ஸ்தாபனத்திறகுக் கொண்டு வரும் என்று தெரிகிறது. அது சம்பந்தமாக பாதுகாப்பு கவுன்சில் விசாரித்து முடிவு செய்யும்படி கோரப்படும்.

பிரிட்டிஷ் பிற்போக்கு பத்திரிகைகள் விஷமம்

லண்டன், டிச. 29

ஆடு நனைகிறதென்று ஓநாய் அழுவதுபோலகாஷ்மீர்ப்பிரச்னை பற்றி பல பிரிட்டிஷ் பிற்போக்கு பத்திரிகைகள் விஷமத்தனமான அபிப்பிராயங்களை வெளியிட்டு வருகின்றன. உள்நாட்டு யுத்தம் மூளும் எனறும், பண்டிதநேரு அவசரப்படாது காஷ்மீரில் தலையிட்டது தவறு என்றும் கன்சர்வேடிவ் ஓநாய் பத்திரிகைகள் ஊளையிடுகின்றன.

உலகில் அமெரிக்க - ரஷிய ஆதிக்கப் போட்டியை சமாளிக்கும் முறையில் இந்தியாவும் பாகிஸ்தானும் பாதுகாப்பு ஒப்பந்தம்செய்து காஷ்மீர் பிரச்னையை சமரசமாகத் தீர்த்துக்கொள்ள வேண்டுமென்று லிபரல் பத்திரிகையான மான்செஸ்டர் கார்டியன் மட்டும் கண்ணியமான ஆலோசனை கூறியிருக்கிறது.

இந்தியா-அமெரிக்கா உறவு

நியூயார்க், டிச 30

ஜனவரி 6-ம் தேதியன்று இங்குள்ள வால்டார்ப் ஹோட்டலில் அமெரிக்காவிலுள்ள இந்தியா லீக்கின் பத்தாவது வருடாந்தக் கொண்டாட்டம்நடைபெறும். அப்பொழுது நடைபெறும்பொதுக்கூட்டத்தில்இந்தியாவில் அமெரிக்க ஸ்தானிகராகவுள்ளவரும் இப்பொழுது இந்திய நிலைபற்றி அமெரிக்க அரசாங்கத்திற்கு விளக்கிச் சொல்ல இங்கு வந்திருப்பவருமான திரு.ஹென்றி எப்.கிரேடி சொற்பொழிவு நிகழ்த்துவார்.

அப்பொழுது அவர், இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்குமிடையேயுள்ள எதிர்கால அரசியல், கலாச்சார,வர்த்தக உறவுகளைப பற்றி விவாதிப்பார். அக்கூட்டத்தில் இந்தியா லீக் தனது எதிர்கால வேலைத் திட்டங்களைப் பற்றிய கொள்கையை விளக்கும். அக்கூட்டத்தில் அமெரிக்க நூலாசிரியர், பேர்ல்பக் (நோபல பரிசு பெற்றவர்) அமெரிக்க பிரஜா சுதந்திர சங்கத்தின் டைரக்டர் ரோஜர் பால்டுவின், இந்தியா லீக் தலைவர் ஜே. ஜே. சிங் முதலியோர் பேசுவார்கள்.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தல்

ஹென்றி வாலஸை அபேட்சகராக நிற்கிறார்

நியூயார்க், டிச. 29

1948ல் நடைபெறும் அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் திரு. ஹென்றி வாலஸை அபேட்சகராக நின்று போட்டியிடுவதாக இன்று அறிவித்தவிட்டார்.

உதவி லண்டன் பிரதிநிதி

திரு வீரசேன நியமனம்

கொழும்பு, டிச. 30

புதிய பட்ஜெட்டில் உதவி லண்டன் பிரதிநிதி பதவிக்காக ரூ 15600 ஒதுக்கி வைக்கப்பட்டிருந்ததல்லவா? இப் பதவியை விவசாயப் படைக் கமிஷனர் ஏ வீரசேன வகிப்பார் எனத் தெரிகிறது.

திரு வீரசேன 1929-ம் ஆண்டு அரசாங்க சேவையில் அக்கவுண்டன்ட் பதவியில்அமர்ந்தார். 1942ல் அவர் உதவி பொதுஜனப் பாதுகாப்புக் கமிஷனராகியதோடு தற்காலிக ஒடிட்டர் ஜெனரலாகவும் சிறிது காலம் கடமை ஆற்றினார். விவசாயப் படையில் அவர் சேவைசெய்த காலத்தில் தற்போதைய விவசாயப் படைகளைத் தோற்றுவித்து வளர்த்ததாகவும் தெரிகிறது

சோஷலிஸட் கட்சியின் வேலைத் திட்டம்

பெப்ரவரி மகாநாட்டில் முடிவாகும்

புதுடில்லி, டிச. 29

சோஷலிஸ்டுகள் பதவி ஏற்க வேண்டுமா கூடாதா என்ற பிரச்னை, அடுத்த பெப்ரவரியில் நடைபெற விருக்கும் சோஷலிஸ்ட் கட்சி மகாநாட்டில் இறுதியாக முடிவு செய்யப்படும் என்று டாக்டர் ராம் மனோஹர் லோஹியா இங்கு சோஷலிஸ்ட் கட்சிக் காரியாலயத்தைத் திறந்துவைத்துக் கூறினார்.

சோஷலிஸட் கட்சி காங்கிரஸுடன் ஐக்கிய மாயிருக்க வேண்டுமா அல்லது தனி ஸ்தாபனமாக வேலை செய்யவேண்டுமா? என்ற பிரச்னையும் அம் மகாநாட்டில் முடிவாகும். கட்சி பின்பற்றப்பட வேண்டிய திட்டமான கொள்கை வேலைத் திட்டத்தை மகாநாடு வகுக்கும் என்றும் அவர் கூறினார்.

இந்தோனேஷியா சிதைவு

டச்சுக்காரர் கைப்பற்றிய பிரதேசம் சமஷ்டியில் இணைப்பு

டச்சுப் பிரதம மந்திரி இந்தோனேஷிய உதவிப் பிரதமர் சந்திப்பு

படேவியா, டிச. 29

டச்சு அரசாங்கம் டச்சு கிழக்கிந்திய தீவுகளில் நிறுவ இருக்கும் இந்தோனேஷிய சமஷ்டி அரசாங்கத்தில் சுமத்ராவில வடகிழக்கு கடற்கரைப் பகுதியிலுள்ள ஜில்லாக்கள் ஒரு சுதந்திர மாகாணமாக இணைக்கப்படும் என்று டச்சுக் கிழக்கிந்திய அரசாங்கப் பிரதிநிதி அறிவிக்கிறார். அம்மாகாணத்திற்கு ஒரு தனி அரசாங்கம் நிறுவப்படும். இப்பிரதேசம் மிகவும் செழிப்புள்ளது. அந்நிய நாட்டினரது ரப்பர், புகையிலை, பேரீச்சம் தோட்டங்கள் அங்கு ஏராளமாக இருக்கின்றன. இதில் 20 லட்சம் ஜனங்கள் வசிக்கிறார்கள். முனனர் இப் பிரதேசமும் இந்தோனேஷிய குடியரசைச் சேர்ந்ததாக இருந்தது. டச்சுக்காரர் தொடுத்த யுத்தத்தில் இப் பிரதேசத்தைக் கைப்பற்றி இப்பொழுது அதை அவர்கள் புதிதாக நிறுவவிருக்கும் சமஷ்டி அரசாங்கத்தின் ஒரு தனிப்பகுதியாக இணைக்கிறார்கள். இவ்விதம் சுமத்ராதீவும் ஜாவா தீவிலும் இந்தோனேஷிய குடியரசிடமிருந்து மற்றும் பிரதேசங்களை சமஷ்டியில் இணைப்பார்கள். மேற்கு ஜாவாவும் மதுராத் தீவும் சேர்ந்த ஒரு பகுதிக்கும் சமஷ்டியில் இணைக்கப்படும் தனி மாகாண அந்தஸது கூடிய சீக்கிரம் அளிக்கப்படும்.

சந்திப்பு

ஐக்கியதேச பாதுகாப்பு கவுன்ஸிலின் மூவர் கமிஷனின் முயற்சியால் அமெரிக்க ஸதானாதிபதி லிவன்குட் இன்று தனது காரியாலயத்தில் டச்சு பிரதம மந்திரி டாக்டர் பீலும் இந்தோனேஷிய குடியரசின் உதவிப் பிரதம மந்திரி சேஜாயாஜித்தும் சந்தித்துப் பேசும்படி ஏற்பாடு செய்தார். டச்சு-இந்தோனேஷிய தகராறு பற்றி இருவரும் ஒருமணிநேரம் சந்தித்துப் பேசினார்கள்.

மானிடரின் ஆயுளை நீடிக்கமுடியும்

லண்டன், டிச. 29

இளமையோடிருக்க வேண்டுமென்று அநேகர் கனவு கண்டபோதிலும் விஞ்ஞானிகள் மானிடர்களின் ஆயுளை நீடிக்க ஆராய்ச்சி செய்துவருகின்றனர். "ஜெரியடைஸ்" எனப்படும் ஒரு ஒளஷதமானது வயோதிகத்தால் ஏற்படும் அகதியை அகற்றுகிறது. வயோதிகர்கள் வேலையிலிருந்து விலகிக் கொள்ளும் வயதடைந்த காலத்தும் வேறு வித வேலைகளிலிருந்தாலொழிய தங்களுடைய வேலைகளிலீடுபட்டே இருக்க இம் மருந்து உதவுகிறது.

தினே தினே விஞ்ஞானிகள் தங்களுடைய ஆயுள நீடிப்பு ஆராய்ச்சிகளை நடத்திவருகின்றனர். இதன் பலனாக இன்னும் சில வருஷங்களில் தற்போதிருப்பதைவிட அதிகமான ஆயுள் அபிவிருத்தி ஏற்படும். உரோமசகாப்தத்தில் ஒருவரின் சராசரி வயது 25 ஆக இருந்தது. 16-வது நூற்றாண்டில் அது 33 ஆக உயர்ந்தது. 19-வது நூற்றாண்டின் மத்தியில் ஒரு மனிதனுடைய சராசரி வயது 40 ஆயிற்று. 1900-க்குப்பின ஆயுள் நீடிப்பு 3ல் ஒரு பங்கு அதிகரித்தது. கணித சாஸ்திரநிபுணர்கள் இன்னும் 20 வருஷங்களில் 10 வயதுக்குட்பட்ட சிறுவர்களின் எண்ணிக்கையைவிட வயோதிகர்களின் எண்ணிக்கை அதிகரிக்குமென்று அறிவிக்கின்றனர்.

தப்பி ஓடிய கைதி

கொழும்பு, டிச. 29

இன்று கண்டி முனிசிபல் கோர்ட்டில் இருந்து காவற் கைதியான டொன் சார்ல்ஸ் ரொட்ரிகோ என்பவன் தப்பி ஓடி விட்டான். பிரஸ்தாப கைதி கிஸ்குரன்கெதர என்னும் இடத்தில் களவுக் குற்றம் புரிந்ததாகக் குற்றம் சாட்டப்பட்டிருக்கிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோட்டங்களில் பாடுபடும் இந்தியத் தொழிலாளர்கள்

"தம் இனத்தவர் என்றே இலங்கை தமிழர் கருதுகின்றனர்"

"தம் உரிமைபோல் அவர் உரிமையையும் அவர்கள் பேணுவர்"

ராஜாஜி தினத்தில் திரு. சிவபாலன் பேச்சு

கொழும்பு, டிச. 31

கடந்த 28-ம் தேதி பூண்டுலோயாவில் இந்தியத் தலைவர் சக்கரவர்த்தி ராஜகோபாலச்சாரியாரின் 70-வது ஆண்டுவிழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. விழாவுக்கு திரு கே. குமாரவேல் (கொட்டகலைப்பகுதி பாராளுமன்ற அங்கத்தினர்) தலைமை வகித்தார். திரிகோணமலைப்பகுதி பாராளுமன்ற அங்கத்தினர் திரு எஸ். சிவபாலன் இந்திய யூனியனின் அசோக சக்கரக் கொடியை ஏற்றி வைத்தார்.

தலைவர் குமாரவேலும், பாராளுமன்ற அங்கத்தினர் திரு வீ. வி. வேலுப்பிள்ளையும் அதன் பின் பேசினார்கள். ராஜாஜியின் லட்சியத்தைப் பின் பற்றுவதோடு ஒன்றுபட்டு வாழ்வதின் அவசியத்தையும் அவர்கள் விளக்கினார்கள்.

அதன்பின் பேசிய திரு சிவபாலன் குறிப்பிட்டதாவது:-

இலங்கையின் செல்வமும் செழிப்பும் தேயிலை, ரப்பர், கொக்கோத் தோட்டங்களாலேயே ஏற்படுகிறது. இவற்றின் ஜீவநாடியாக இந்தியத் தொழிலாளரே விளங்குகின்றனர். இதன் காரணமாக இன்று இந்தியக் கொடியை ஏற்றுவதில் நான் பெருமகிழ்ச்சியை அடைகிறேன். ஆனால் கஷடப்படும் இந்தியத் தொழிலாளிகளின் பாடுகளுக்குத்தகுந்த பரிசளிக்கப்படவில்லை. அதுமட்டுமன்று. அவர்களின் பிரஜா உரிமைகள் வழங்கப்படவில்லை. இது துக்ககரமான ஓர் நிலையாகும். தென்னிந்திய துறைமுகங்களைச் சீர்திருத்துவதற்கு சென்னை மாகாண சர்க்கார் தீர்மானித்துள்ளது. இதன் காரணமாக இலங்கை இந்திய உறவு எதிர்காலத்தில் அதிகமாக ஏற்படுவதியற்கையே. இருநாட்டு மக்களும் இதனால் அதிக நன்மையை அடையக்கூடும்.

இலங்கைத் தமிழர்களைப் பொறுத்த அளவில் தோட்டங்களில் வேலை செய்யும் தமிழ்மக்களை தங்கள் சொந்த இனத்தினராகவே அவர்கள் எண்ணுகின்றனர். அத்துடன் அவர்கள் நலவுரிமைகளை தங்கள் உரிமைகளைப் போலவே அதிககருத்தாகப் பேணியும் வருவர்.

ராஜாஜியின் ஞாபகத்தைச் சுடரவைக்கச் சிறந்த மார்க்கம் அன்னாரின் அறவழி ஒன்றையாவது பின்பற்றுதலே அவர் தமது பதவியைத் துறந்து மக்கள் முன்னேற்றத்திற்காக அரசியலில் புகுந்து பயமறியாது போராடிவருகிறார். ஹரிஜனங்களின் முன்னேற்றத்திற்காக கண்ணும் கருத்துமாக அவர் சேவை ஆற்றுகிறார். ராஜாஜி ஓர் விவேகி. அத்துடன் தளராமுயற்சியும், அனுபவசாத்தியமான பாதையில் பிரயாணஞ் செய்யும் இயல்பும் வாய்ந்த பெருந்தகையார். சொல்லும் செயலும் ஒன்றாய் இருக்கும் ஓர் அபூர்வ அரசியல் வாதி. இதுவே அவர் வெற்றியின் மர்மமாகும்.

பாராளுமன்ற அங்கத்தினர்கள் ராஜலிங்கம், எம். சுப்பையா ஆகியோரும், ஏ. கதிரேசன், எஸ். திருநாவுக்கரசு முதலிய பலரும் அதன்பின் பேசினார்கள்.

திரு. சுப்பையா தமது பேச்சில் மதுவரக்கனுக்கெதிராக நடத்தும் போராட்டத்தைக் குறிப்பிட்டு தோட்டத் தொழிலாளர் குடிகெடுக்கும் குடியை விட்டொழிக்கவேண்டும் என்றும் வற்புறுத்திக் குறிப்பிட்டார்.

கடலில் குதித்த ராணுவ வீரர்கள்

10 பேர்கள் மலேயாவில் கரையேறினர்

சிங்கப்பூர், டிச. 29

இந்தோசைனு சென்றுகொண்டிருந்த பிரெஞ்சுக் கப்பலிலிருந்து நடுக்கடலில் குதித்த ராணுவ வீரர்களில் 10 பேர்கள் மூன்று தினங்களாகக் கட்டைகளைப் பிடித்துக்கொண்டு கடலில் தத்தளித்து அன்ன ஆகாரமின்றி மழைத் தண்ணீரைக் குடித்தகொண்டு கடைசியாக அலைகளால் மேற்கு மலேயா கடற்கரையில் கொண்டு வந்து ஒதுக்கப்பட்டனர். அவர்கள் கரை சேர்க்கப்பட்ட போது பிரெஞ்சு அதிகாரிகள் தங்களிடம் ஒப்புவிக்கவேண்டுமென்று கோரினர். அவர்களை அந்தக் கப்பல் ஷாங்கைக்குக் கொண்டுபோக முயற்சித்ததாகவும் உயிருடன் தாங்கள் அங்கு போய்ச் சேரப்போவதில்லையென்றும் அவர்கள் தெரிவித்தனர். அவர்களில் 6 பேர்கள் இத்தாலியர். இருவர் சுவிட்ஜர்லாந்து தேசத்தினர், ஒருவர் ஜெர்மானியர். மற்றவர் டச்சுக்காரர். இவர்கள் ஓரானிலிருந்து கப்பலேறியவர்களாதலால் இவர்களை ஓரானுக்கு அனுப்புவதா அல்லது அவரவர் நாடுகளுக்கு அனுப்பி வைப்பதா என்ற மலேயா குடியேற்ற இலாகா ஆலோசித்து வருகிறார்கள்.

கள்ளத்தனமாக தங்க வர்த்தகம்

போலந்து பூதர் கைது

பெர்த், டிச. 29

மேற்கு ஆஸ்திரேலியாவிலுள்ள தங்கச் சுரங்கங்களிலிருந்து கள்ளத்தனமாக தங்கத்தைக் கடத்தி வர்த்தகம் செய்ததாக ஆஸ்திரேலியா போலிசார் தேடிக்திரிந்த போலந்து பூதரான 43 வயதுள்ள ஜின்ஸலர் என்பவர் சிங்கப்பூரில் கைது செய்யப்பட்டு போலிஸ் பந்தோபஸ்துடன் இங்கு கொண்டுவரப்பட்டார். ஆஸ்திரேலிய தங்கத்தை அவுன்ஸ 10 பவுண் 15 ஷில்லிங் 3பென்சுக்கு வாங்கி அதைக் கள்ளத்தனமாக சிங்கப்பூருக்கும் மற்றும்தூரகிழக்கு நாடுகளுக்கும்கடத்தி சென்று அவுன்ஸ 30 பவுணுக்கு விற்கப்படுவதாக ஆஸ்திரேலிய போலிசார் துப்பு கண்டுபிடித்தனர். நவம்பர் 10-ம் தேதி இன்ஸலர் சிங்கப்பூரில் கைது செய்யப்பட்டு 5000 டாலர் ஜாமீன்மீது காவலில் வைக்கப்பட்டிருந்தார்.

புத்தர் சிஷ்யரின் புனித அஸ்திகள்

கண்டியில் தரிசனத்துக்கு வைக்கப்படுமா?

கொழும்பு, டிச. 30

சாஞ்சி செத்தியகிரி பௌத்த விகாரை அறங்காவார்க்கட்டு நாட்டு விழாவுக்குச் சென்றிருந்த நிதி மந்திரி திரு ஜே. ஆர். ஜயவர்த்தனு நேற்றுமாலை விமான மூலம் இலங்கை மீண்டார்.

அவருடன் திரும்பிய மகாபோதி சங்க தூதுக்கோஷ்டியைச்சேர்ந்த தயாஹேவாவிதாரண புத்தர் சிஷ்யரின் புனித அஸ்திகள் இங்கிருந்து சாஞ்சிக்குப் போவதன் முன்னர் இன்னொரு தடவை பக்தர்களின் தரிசனத்திற்கு வைக்கப்படும் என அறிவித்தார்.

இம்முறை கண்டியில் புத்த தந்தத்தின் அருகே இவை காட்சிக்கு வைக்கப்படலாம் என அறியப்படுகிறது.

மாஜி பிரதமர் கல்லறையில் விஷமம்

புலவாயோ, டிச. 29

ஆப்பிரிக்கா கண்டத்தில் தென் ரொடேஷியாவில் பீரிட்டிஷ் ஆதிக்கத்தை ஸ்தாபித்த வரும் ரோடேஷியாவின் முதலாவது பிரதம மந்திரியுமான செசில் ரோட்ஸின் கல்லறை சேதப்படுத்தப்பட்டிருந்தது. விஷமம் செய்தவரைக் கண்டுபிடிக்க போலிசார் முயற்சித்து வருகின்றனர்.

சுதந்திர மஹோதாவில் திருத்தம் செய்யப்படுமா?

பௌத்த மத பாதுகாப்பு வாசகம் வேண்டுமாம்

கண்டி, டிச. 30

பிரதமர் டி. எஸ். சேனநாயகா, ஜே. எல். கொத்தலாவல ஆகியோரை மல்வத்தை விகாரைத் தூதுக்கோஷ்டி ஒன்று பேட்டி கண்டது. அவர்கள் 1815ல் இயற்றப்பட்ட கண்டி பிரகடனத்தின்படி புத்த மதமும், மத போதகர்களும் பாதுகாக்கப் படுவர் என்றிருப்பதாகவும், இதேவித வாசகம் ஒன்று சுதந்திர மஹோதாவில் சேர்க்கப்படாததால் தாம் அதிருப்தி அடைந்துள்ளதாகவும் தெரிவித்ததனராம். இதன்பேரில் பிரதமர் வேண்டிய திருத்தத்தை மஹோதாவில் ஏற்படுத்த தாம் முயல்வதாக அறிவித்துள்ளதாகத் தெரிகிறது.

அஸ்கிரிய, மல்வத்தை மகாநாயக்கர்களும் இது சம்பந்தமாக பிரதமருக்கு கடிதங்கள் எழுதியுள்ளனர்.

சர்வ தேச பாஷா சங்கம்

இந்திய மாணவர்கள் தனியே பிரிந்தனர்

லண்டன், டிச. 29

திரு. டெரன்ஸ் டிஸிஸகோல தலைமையில் கிராய்ட்டனில் ஸ்தாபிக்கப்பட்டு நடைபெற்று வரும் சர்வ தேச பாஷா சங்கத்தில் 53 நாடுகளைச் சேர்ந்த 450 மாணவர்கள் தங்கி பயில்கின்றனர். அங்குள்ள இந்திய மாணவர்கள் தங்களுக்கு ஒரு சங்கம் ஏற்படுத்த முயற்சித்ததை தலைவர் ஆட்சேபித்து இந்திய மாணவர் தலைவர்களான நான்கைந்து பேர்களை வெளியேற்றச் சொன்னார். இச்செயலை ஆட்சேபித்து இந்திய மாணவர்கள் அனைவரும் சர்வ தேச பாஷா சங்கத்தைப் பஹிஷ்கரித்து புதிதாக ஒரு சர்வ தேச பாஷா சங்கத்தை நிறுவ ஏற்பாடு செய்கின்றனர். 48 பேர்கள் வெளியேறி விட்டனர். இன்னும் 38 பேர்கள் தங்க இடமகப்படாததால் இன்னும் வெளியேறவில்லை. பாஷா சங்கத் தலைவர் தன்னை இந்திய மாணவர் சங்கத்திற்கு தலைவராக்க வேண்டுமென்று கோரியதை மாணவர்கள் மறுத்து விட்டார்கள். 3000 மாணவர் தங்க ஒரு விடுதியை அமைக்கும் முயற்சியில் அவர் ஈடுபட்டிருந்தார். இதற்கு 20 லக்ஷம் பவுன் சேகரிக்க அவர் முயன்றார். நகரசபை அவர் வேண்டுகோளை நிராகரித்து விட்டது. மந்திரியின் சிபார்சு மூலம் இந்த ஏற்பாட்டைச் செய்ய போவதாகச் சொன்னார். ஹைகமிஷனர் கிருஷ்ண மேனன இந்தியா செல்லு முன்பே இத்தகவாறு அவருக்கு அறிவிக்கப்பட்டது.

கொலை

கொழும்பு, டிச. 30

மகாஇலுப்பிரியாவில் சாலோ சிங்கோ என்பவன் ஒரு வயல் வரப்பில் இறந்துகிடக்கக் காணப்பட்டான். அவன் கழுத்தில் பலமான வெட்டுக் காயம் காணப்பட்டது. இக் கொலை சம்பந்தமாகப் போலிஸார் தற்பொழுது புலன் விசாரித்து வருகின்றனர்.

சர்ச்சில் சுகயீனம்

மரகேஷ், டிச. 29

மொராக்கோவில் தங்கியிருக்கும் வின்ஸ்டன் சர்ச்சில் ஜலதோஷத்தால் பீடிக்கப்பட்டு இரு தினங்கள் படுக்கையிலிருந்தார். நாளை எழுந்து நடமாடுவார்.

ஆண் பெண் சரீர சாஸ்திரக் கல்வி

மாணவருக்குப் புகட்டுதல் பற்றி மகாநாடு

கொழும்பு, டிச. 30

ஆண் பெண் தேக அமைப்பு முதலிய விஷயங்களை நன்முகப் புரிந்து கொள்ளாததால் சிறுவர் சிறுமியர் தமது வாழ்க்கையைச் சில சமயங்களில் மிகத் தவறுன பாதையில் செலுத்தி விடுவதால் இவ்விஷயங்கள் பற்றி இளைஞர்களுக்குக் கல்வி புகட்டப்பட வேண்டும் என்று கல்வி இலாகாவிலும் சுகாதார இலாகாவிலும் பலர் கருதி வருகின்றனர். இது எந்த முறையில் வகுக்கப்பட வேண்டும் என்ற சிலவிஷயங்களை ஆராய்வதற்கு அடுத்த மாதம் மேற்படி இரண்டு இலாகாவின் பிரதிநிதிகளும் அடங்கிய ஓர் மகாநாடு நடைபெறும் எனத் தெரிகிறது.

சரசாலை மட்டுவில் இந்து வாலிபர் சங்கம்

சாவகச்சேரி, டிச. 30

சரசாலை, மட்டுவில் இந்து வாலிபர் சங்கத்து முதலாவது வருடாந்தக் கூட்டம் சென்ற ஞாயிற்றுக்கிழமை மட்டுவில் வடக்குக் கமலாசனி வித்தியாசாலையில் திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலைப் பேராசிரியர் பண்டிதர் சி. கணபதிப்பின்னை அவர்களின் தலைமையின்கீழ் ஆரம்பமாயது. அவ்வமயம் கமலாசனிவித்தியாசாலை ஆசிரியர் திரு. சுப்பிரமணியம் என்பவரால் வாலிபர் சங்கமும் அதன் நோக்கமும்" என்னும் விஷயம் பற்றியும், இளைப்பாறியிருக்கும் தபால் நிலையத் தலைவர் திரு. ச. தியாகராஜ என்பவரால் சைவ சமயமும் எதிர்காலமும்" என்னும் விஷயம் பற்றியும், சரஸவதி வித்தியாசாலை தலைமை ஆசிரியர் திரு பொ. கனகசபை அவர்களால் "மது விலக்கு" என்னும் விஷயம் பற்றியும் சொற்பொழிவுகள் நடாத்தப்பட்டு முடிவில் திரு வ நாகரட்னம் என்பவரால் இசைவிருந்து அளிக்கப்பட்டது (ந-நி)

சைவ இளைஞர் சங்கம்

மண்டைதீவு, டிச. 27

ஆர்த்திரா அபிஷேக தினமான மார்கழிமாதம் 27-ந்திகதி சனிக்கிழமை மாலை 6 மணியளவில் மண்டைதீவு சனசமூக நிலைய இலவச வாசிகசாலையில் அவ்வூர் சைவ இளைஞர்களால் சைவ மத வளர்ச்சிக்கும் சமூக விருத்திக்கும் தொண்டாற்ற வார் வேண்டி "சைவ இளைஞர் சங்கம்" ஒன்று ஸ்தாபிக்கப்பெற்றது, மேற்படி சங்கத்திற்கு தலைவராக திரு. க. மாணிக்கலிங்கம் அவர்களும் உபதலைவராக திரு. வே. நடராசா அவர்களும் கௌரவ காரியதரிசியாக திரு. எ. இரத்தினலிங்கம் அவர்களும் உபகாரியதரிசியாக திரு. கா. மகேஸ்வரலிங்கம் அவர்களும், தனாதிகாரியாக திரு நி. பஞ்சாட்சரம் திரு. கா. நடராசா ஆகியோரும் (ஒடிட்டர்) கணக்குப் பரிசோதகராக திரு. கா. வயித்தியலிங்கம் அவர்களும் நிர்வாக சபையார் ஐவரும் தெரிவு செய்யப் பெற்றார்கள் தலைவர் திரு க மாணிக்கலிங்கம் அவர்கள் சங்கத்தின் கொள்கைகள் நடவடிக்கைகள் என்பனவற்றை எடுத்துக்காட்டி ஓர் சொற் பொழிவாற்றினார்.

புத்தபிக்குவான ஐரோப்பியர்

சொந்த ஊர் திரும்ப ஆசை

தொடங்துவை, டிச. 31

சமீபத்தில் கப்பலில் இருந்து தப்பி ஓடி புத்த பிக்குவான புத்த பிரியதீரோ என்னும் கப்லான் ஐரோப்பாவிலுள்ள தனது தந்தையாரைப் பார்க்க விருமபுவதாகத் தெரிகிறது. இதன் காரணமாக அனுதாபிகளிடம் பணம் உதவும்படி அவர் கோரியுள்ளார்.

"சமய நெறி குன்றினால் மீண்டும் போர் ஏற்படும்"

4-வது சைவ மகாநாட்டில் தலைவரின் பிரசங்கம்

கோவையில் விமரிசையாக நடைபெற்றது

கோவை, டிச. 28

4-வது சைவ மகாநாடு சைவ சித்தாந்த மகாசமாஜத்தின் ஆதரவில் இன்று கோவை சர்க்கார் கல்லூரியில் நடைபெற்றது. மகாநாட்டிற்குப் பல பாகங்களிலிருந்தும் ஏராளமான வர்கள் வந்திருந்தார்கள்.

பிரதிநிதிகளை வரவேற்று ஸ்ரீ வி சி. வெள்ளிங்கிரி கவுண்டர் செய்த பிரசங்கத்தில் தமிழ் நாட்டில் மிகவும் பிரசித்தி பெற்ற ஸ்தலங்கள் பல உண்டென்றும் தேயிலையில் பேரூர் முக்கிய இடமென்றும் கூறினார். மக்களுக்கு சமயத்தில் நம்பிக்கை இல்லையென்றும் வாலிபர்களிடம் உள்ளும் புறமும் ஒரே மாதிரியாய் இருப்பதாகவும் இந்த நிலைமை மாறி சமயப் பற்றை வளர்க்க வேண்டியது அவசியமென்றும் கூறினார். அவ்வாறு இல்லாவிட்டால் சமயங்களுக்கே அபாயம் நேரக்கூடும் எனபதாகவும் கூறினார்.

கோவில்கள், மடங்கள் ஆகியவற்றினின்றும் வரும் பணத்தை ஆலயங்களை செப்பனிட்டு மத போதகர்களைப் பரப்புவும் கலவி போன்ற விஷயங்களுக்கு செலவழிக்க வேண்டுமென்றும் இதர விஷயங்களுக்காக செலவழித்தல் நியாயமல்ல என்றும் கூறினார்.

ஸ்ரீ டி. ஏ. ராமலிங்கஞ் செட்டியார் மகாநாட்டை ஆரம்பித்து வைத்தார். தாம் சில சந்தேகங்களைக் கொண்டு 1913-ம் வருடத்திலிருந்தே மத சம்பந்தமான கூட்டங்களில் கலந்து கொள்ளவில்லையென்றும் தனிப்பட்ட சமாஜங்களை ஏற்படுத்தி வித்தியாசங்களை வளர்ப்பது சரியா என்று யோசிக்க வேண்டுமென்றும் புத்தர், கிறிஸ்து போன்றபெரியார்கள் பல உண்மைகளை போதித்துள்ளார்கள் என்றும் கூறினார். அம்மாதிரியே சைவ மதத்தார்களும் பல அரிய உண்மைகள் மதாசாரியர்களால் போதிக்கப்பட்டிருக்கின்றன என்பது தெரிவிக்கவே சைவர்கள் தங்கள் நாகரீகத்தையும் இதர பல பொது விஷயங்களையும் எடுத்து பரப்பி வரலாம் என்றும் கோவில்கள் பொது என்றும் பள்ளிக்கூடங்கள் கோவில்களின் பணத்தைக் கொண்டு நடத்தலாம் என்றும் மத சம்பந்தமான விஷயங்களை விருத்தி செய்வதோடு பொதுவான சில காரியங்களைச் செய்வதற்கும் கோவில் பணத்தைச் செலவழிக்கலாமென்றும் கூறினார்.

தலைவர் பிரசங்கம்

தலைவர் ஸ்ரீ டி. எஸ். கந்தசாமி முதலியார் பேசுகையில் மக்களிடம் சமய நெறி குன்றினால் போர் மீண்டும் ஏற்படுவது சாத்தியம் என்று கூறினார். அன்றாட வாழ்க்கையில் சமய நெறியைக் கையாண்டு சிவனடியார் திருக்கூட்டங்களை நிறுவப் பெறுதல் வேண்டும். புலமையும் ஞானமும் பெற்ற அறிஞர்கள் சிவ நெறிபற்றிய நூல்களை உரை நடையில் ஆங்கிலத்திலும், தமிழிலும் எழுதி வெளியிட வேண்டும் சமய ஆராய்ச்சி செய்து சிவ நெறி பற்றிய நூல்களை வெளியிட வேண்டுமென்று கூறி முடித்தார்.

மங்கையர் மகாநாடு

சைவ மகாநாடு நேற்று கூடியபோது மங்கையர் மகாநாடு ஒன்று சர்க்கார் கல்லூரி கட்டிடத்திலே நடைபெற்றது. ஸ்ரீமதி வசுந்தாதேவி மகாநாட்டின் சார்பாக எல்லா பிரதிநிதிகளையும் வரவேற்றார்.

ஸ்ரீமதி ராஜம் மகாநாட்டை ஆரம்பித்து வைக்கையில் சமய பண்பாடுகளையும் அவற்றின் மேன்மைகளையும் எடுத்து விளக்கினார்.

மகாநாட்டின் தலைவி ஸ்ரீமதி அ. கு. காமாட்சி அம்மையார் பேசுகையில், சமாஜத்தின் நோக்கங்களையும் தற்சமயம் மக்களிடையே தோன்றியுள்ள பல கஷ்டங்களையும் எடுத்துக் கூறினார். இவற்றிற்குக் காரணம் அன்பு நீங்கி குன்றியதே என்றார் சமயத்தின் நோக்கங்களையும் சமய வழிபாடுகளையும் எடுத்துக் கூறி, பெண்கள் சமய விஷயங்களில் இன்னும் அதிகக் கவனம் செலுத்தவேண்டுமென்றும் கூறினார்.

வாலிபர் மகாநாடு

சைவ மகாநாட்டின் சம்பந்தமாக வாலிபர்மகாநாடு ஒன்றும் நடைபெற்றது. பிரதிநிதிகளை ஸ்ரீ ஆர். எம். குமாரசாமி கவுண்டர் வரவேற்றார்.

ஸ்ரீ நாராயணசாமி நாயுடு மகாநாட்டை ஆரம்பித்து வைக்கையில் சமய சம்பந்தமாகப் பல சீர்திருத்தங்களை சட்ட பூர்வமாக ஏற்படுத்த வேண்டுமென்றும் திருவாசகம், திருக்குறள் நூல்களின் மேன்மைகளைப்பற்றியும் விரிவாக எடுத்துக் கூறினார்.

மகாநாட்டின் தலைவர் ஸ்ரீ அ. ஞானசம்பந்தம் செய்த பிரசங்கத்தில் அறிவைக்கொண்டு சமயத்தை ஆராய்ந்து பிறகு எவ்வாறு உணர்ச்சியினால் மனிதன் கட்டுப்படுகிறான் என்பதை விளக்கினார், பிறருடைய நன்மைக்காக வாழ்வதையே சிறந்ததாகக்கொண்டதாதான் மனிதன் அமைதியைக் கண்டான் என்றும் கூறினார்.

கலை கண்காட்சி

சேர்மன் டாக்டர் சி. நஞ்சப்பா கலை கண்காட்சியை ஆரம்பித்து வைத்தார். மதமும் சமூகமும் ஒன்றாக வளர்ந்து வரவேண்டுமென்றும் கூறினார். ஸ்ரீ சச்சிதானந்தம் பிள்ளை கொடியேற்றுவித்து அதன் தத்துவங்களை விளக்கினார். மகாநாட்டுக்கு ஆசி கூறி வந்த செய்திகளையும் ஸ்ரீ சி. எம். ராமச்சந்திரஞ் செட்டியார் வாசித்தார்.

ராஷ்ட்ரீய சேவாதள அணிவகுப்பை தடை செய்தது ஏன்?

பம்பாய் சர்க்கார் விளக்கம்

பம்பாய், டிச. 29

பம்பாயிலுள்ள தொழிற் பிரதேசமான குர்லாவில் தற்போது ஏற்பட்டிருக்கும் வகுப்புக் கலவரத்தின் காரணமாக நேற்று நடக்கவிருந்தராஷ்ட்ரிய சேவாதளத்தின் அணிவகுப்பு தடை செய்யப்பட்டது என்று பம்பாய் சர்க்கார் இன்று விடுத்துள்ள அறிக்கையில் விளக்கியிருக்கிறது.

தாதரிலுள்ள சிவாஜி பார்க்கில் நேற்று 6000 தொண்டர்கள் கூடியிருந்தபோது இந்த தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அணிவகுப்பை தடை செய்வதற்காக வருந்துவதாகவும், அமைதி ஏற்பட்டபின் அணிவகுப்பு நடத்துவதற்கு அனுமதி தருவதாகவும், டிசம்பர் 29-ந் தேதி நடக்க விருக்கும் பொதுவேலை நிறுத்தத்துக்கும் தடை உத்தரவுக்கும் சம்பந்தமில்லை யென்றும் சர்க்கார் அறிக்கை கூறுகிறது.

மார்க்கெட் நிலவரம்

தங்கம் வெள்ளி விலை

கொழும்பு, டிச. 31

தங்கப்பவுன் விற்கும் விலை	ரூ.	ச. 70-00
அரைப் பவுன்	"	40-00
பவுன்மாற்றுத் தங்கம்		65-00
வெள்ளி [நூறு ரூபாய் கொண்ட எடை]	"	130-00

ரப்பர்

ஒரேப் ந. 1	ராத்தல்	00-81
சீட் ந. 2	"	00-55

கொக்கோ

நம். 1	ராத்தல்	00-95
" 2	"	00-85
" 3	"	00-70

கொப்பரா

எஸ்டேட் நம்பர் 1		125-00

தேங்காய் எண்ணெய்

டன் ஒன்றுக்கு		849-00
100 ராத்தல் கொண்ட கண்டி 1க்கு		42-47

தேங்காய்ப் புண்ணாக்கு

டன் ஒன்றுக்கு		92-50
தேங்காய்பூ (ராத்தல்)		00-62

கிறிஸ்மஸ் வாண வேடிக்கை

பலர் கண்களை இழந்தனர்


கொழும்பு, டிச. 30

கடந்த கிறிஸ்மஸ தின வாண வேடிக்கைகளின் காரணமாக மூவர் தங்கள் ஒவ்வொரு கண்களை இழந்து விட்டதாகவும் இன்னொருவர் தன் கண்ணையும் கையையும் இழந்து விட்டதாகவும் தகவல் கிடைத்துள்ளது.

இலங்கையில தயாரிக்கப்பட்டு விற்பனையாகிவரும் ஒருவகை வெடி இருப்பதாகவும் அதன் திரியில் நீப்பிடித்து ஒரு கணத்தில் அது பலமாக வெடித்துவிடுவதாகவும், இதன் காரணமாகவே அதிகரித்த விபத்துக்கள் நடந்து வருகிறதென்றும் தெரிகிறது.

போலிஸார் இத்தகைய ஆபத்தான வெடிகள் தயாரிப்பதைச் சீக்கிரம் தடைசெய்ய நடவடிக்கை எடுக்கலாம்என்று அறியப்படுகிறது.

இன்னோரிடத்தில் ஒருவர் வெடிகள் தயாரித்துக் கொண்டிருந்த போது ஒரு விபத்தேற்பட்டு அதன் பயனாக அவர் இரு கண்களிலும் கண்ணாடி ஓடுகள் தைத்து ஆபத்துக்குள்ளானதாகத் தெரிகிறது.



கட்டிடத்துக்கு தேவையான சிமந்தும் மற்றச் சாமான்கள் எல்லாம் எங்களிடம் குறைந்தவிலையில் பெற்றுக்கொள்ளலாம்.

என். வயித்திலிங்கம் - கொம்பனி
No-38. மூன்றுங்குறுக்குத் தெரு,
புறக்கோட்டை, கொழும்பு.
டெலிபோன்: 2029
டெலிகிராம்: 'ENVAITLIN'
கிளை:- பெரியகடைத் தெரு,
யாழ்ப்பாணம் டெலிபோன்: 30.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகில இந்திய பட்டுசபை

ஜப்பான் பட்டு வியோகம்

பங்களூர், டிச. 28

சமீபத்தில் புதுடில்லியில் நடைபெற்ற பட்டுநூல் மகாநாட்டில், யுத்த நஷ்டஈடாக ஜப்பானிலிருந்து வரும் பட்டுகளில் ஒரு குருக்கு 1,200 மூடை பட்டும், சென்னை மாகாணத்திற்கு 900 மூடை பட்டும் வங்காளத்திற்கு 900 மூடை பட்டும் விநியோகிக்க இந்திய அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது. அகில இந்திய பட்டுசபை அமைக்கவும் தீர்மானிக்கப்பட்டது. இச் சபையில் மைசூர், காஷ்மீர், வங்காளம், சென்னை ஆகியவற்றிற்கு தலா இரண்டு அங்கத்தினர்களும், இதர மாகாணங்களிலும் சமஸ்தானங்களிலும் 500 ஏக்கர் நிலம் பட்டுப் பூச்சி உற்பத்தி செய்யப்படும் பிரதேசம் ஒவ்வொன்றுக்கும் ஒரு அங்கத்தினரும் நியமிக்கப்பட வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

கோட்டையில் போலிஸாரின் தீடீர் சோதனை

பந்தயக்கடை நடந்தியதாக எழுவர் கைது

கொழும்பு, டிச. 30

கோட்டைப் பகுதியில் ஒரு இடத்தை சனிக்கிழமை நடுப்பகலில் கோட்டை போலிஸார் திடீரென சோதனை செய்து சட்டவிரோதமாக பந்தயக்கடை நடத்திய சிலரைக் கைது செய்தனர் என்றும் அது சம்பந்தமான பந்தய காசுத் தண்டுகளையும் ரூ 1,665-44 ரொக்கமும் எடுக்கப்பட்டதென்றும் கூறப்படுகிறது. இதுசம்பந்தமாக கைது செய்யப்பட்ட ஏழு பேர்கள் பிணையில் விடப்பட்டுள்ளனர் ஏற்கனவே இதில் தடைசெய்யப்பட்ட இருவர் விடுவிக்கப்பட்டுவிட்டனர். பொலிஸார் விசாரணை செய்கின்றனர்.

பர்மா எண்ணெய்க் கம்பெனி ஜெனரல் மானேஜர் மரணம்

ரங்கூன், டிச. 28

பர்மா எண்ணெய்க்கம்பெனி ஜெனரல் மானேஜர் திரு பி. டி. எம். லிங்கமன் என்பவரு டைய வீட்டில் அவரது மனைவி சுட்டுக் கொலை செய்யப்பட்டது சம்பந்தமாக ரங்கூன் போலிசார் விசாரணை செய்கின்றனர். ஸ்ரீமதி லிங்கமன் ஒருவாரத்துக்கு முன்னதாகவே பிரிட்டனிலிருந்து வந்துள்ளார்.

(ராய்ட்டர்)

இந்திய சமஸ்தான படை ஆலோசகர்

புதுடில்லி, டிச. 28

மேஜர் ஜெனரல் மூரேக்குபதிலாக மேஜர் ஜெனரலாக உயர்த்தப்பட்டுள்ள கர்னல் ஹிம்மத சிங் ஜி இந்திய சமஸ்தான படைகளின் ஆலோசகராக இந்திய அரசாங்க சமஸ்தான இலாகாவில் நியமிக்கப்பட்டிருக்கிறார். இவர் இரு உலக யுத்தங்களிலும் கலந்து கொண்டவர்.

இவர் 1940-42வது வருடங்களில ஜப்பானிலிருந்த பிரிட்டிஷ் தானிகத்தில் ராணுவ அதிகாரியாக இருந்தவர். போர் ஹார்பர் சம்பவர்த்திக்குப் பின் 8 மாத காலம் ஜப்பானியரால் சிறைபிடிக்கப் பட்டிருந்தார். யுத்தக் கைதிகள் மாற்றப்படுகையில் அவர் ஜப்பானிலிருந்து இந்தியாவுக்குக் கொண்டுவரப்பட்டார். சமீபத்தில் அவர் கதியவார் பாதுகாப்புப் படைகளுக்கு பிரதம ஆலோசகராக இருந்தார். 30 வருட சேவைக்குப்பின் உத்தியோகத்திலிருந்து விலகி இளைப்பாறிக்கொண்டிருந்தார்.

இந்திய விவசாயிகளுக்கு அமெரிக்கா உதவி

வாஷிங்டன், டிச. 28

இந்திய விவசாய அபிவிருத்திக்கு அமெரிக்கா நிபுணர்களை அனுப்பி உதவி செய்வது சம்பந்தமாக இந்தியாவில் அமெரிக்க ஸ்தானிகராகவுள்ள திரு கிரடி இங்குள்ள அதிகாரிகளைக் கலந்து பேசினார்.

20-வது அகில இந்திய மாதர் மகாநாடு

வெளிநாட்டுப் பிரதிநிதிகளும் விஜயம்

சென்னை, டிச. 27

"வயது வந்தோருக்கெல்லாம் வாக்குரிமை புது அரசியலமைப்புப்படி தரப்படுகிறது அதனால் மாதர்களின் பொறுப்பு அதிகமாகிறது. தேசத்தின் அரசியல் சமுதாய விஷயங்களில் அவர்கள் அக்கறை காட்டி பங்கெடாவிடில் அரை வாசி ஜனத்தொகையினருக்கு இதனால் ஏதுமே இல்லை" என்று சென்னையில் நடைபெறவிருக்கும் அகில இந்திய மாதர் மகாநாட்டுத் தலைவி ஸ்ரீமதி அலுசூயாபாய் காளே இன்று கூறினார்.

"தேசத்தின் மாதர்களை எல்லாம் ராஜீய, சமூக விஷயங்களில் அவர்கள் அக்கறைகாட்டும்படி இம்மகாநாடு செய்தால் இது ஏதோ சாதித்தது என்ற அர்த்தம்" என்றார்.

ஸ்ரீமதி அமிருத கௌரும் பேசுவார்

இம் மாதர் மகாநாட்டில் சென்னை வந்திருக்கும் இந்திய சுகாதார மந்திரி ஸ்ரீமதி அமிருத கௌரும் கலந்துகொள்ளுகிறார். இம் மகாநாட்டுக்குப் பல தேசங்களிலிருந்தும் அநேக பிரதிநிதிகள் வருகிறார்கள்.

இந்தோனேஷியாவி லிருந்தும்

இந்தோனேஷியாவிலிருந்து ஸ்ரீமதிகள் டாக்டர் பிலாண்டிரி சுகந்தம் சுனராவ், உக்தமி சூர்யதர்மா, பிதாராஹீராவத ஆகிய நால்வர் வந்திருக்கின்றனர். இவர்களில் ஒருவர் பத்திரிகை நிருபர். பிரிட்டனிலிருந்து ஸ்ரீமதி எஸ்தர் மியூரெவெட் என்பவர் வந்திருக்கிறார்.

மகாநாடு அட்டவணை

29-ந் தேதியன்று லேடி வில்லிங்டன் பயிற்சிக் கல்லூரியில் ஸ்ரீமதி ராமராவ் தேசிய கொடியேற்றுவார். அதனையடுத்து பம்பாய் ஷெரிப் ஸ்ரீமதி மிதான்லாமால் சங்காட்சி திறக்கப்படும். 4 மணிக்கு மகாநாடு. ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலட்சுமியின் பிரார்த்தனை பாட்டுடன் ஆரம்பம். அதையடுத்து மகாநாட்டுத் தலைவர் பிரசங்கம். பின்னர் மிதவாத சம்மேளனத் தலைவர் டி. ஆர். வெங்கிட ராமசாஸ்திரி, டாக்டர் ஏ. லட்சுமணசாமி முதலியார், ஜேம்ஸ் கசின்ஸ் மற்றும் இதர வெளிநாட்டுப் பிரதிநிதிகள் பேச்சு இரவு 9 மணிக்குக் கண்டியில் மகாநாட்டு பிரதிநிதிகளுக்குக் கவர்னர் மனைவி வரவேற்பு.

30-ந் தேதி காலை 9-30க்குப், பிற்பகல் 2-30க்கும் மகாநாடு. இரவு 9 மணிக்குக் கதம்பக் கச்சேரி. 31-ந் தேதி காலை 9-30க்கு மகாநாடு. 5 30க்கு மேயர் வரவேற்பு 6-30க்கு பிரதிநிதிகளுக்கு விஜயநகரம் மகாராணி விருந்து. ஜனவரி முதல் தேதி 9-30க்கும் 2-30க்கும் மகாநாட்டுக் கூட்டம்.

"மானமாய் வெளியேறுக"

"இல்லையேல் சுதந்திர தினத்தன்று நடவடிக்கை எடுப்போம்"

பிரெஞ்சு எகாதிபத்தியத்திற்கு காரைக்கால் மக்கள் எச்சரிக்கை

காரைக்கால், டிச 27

கடந்த ஞாயிற்றுக்கிழமை பன்று ஜனப் அகமத் ஸைனு மரைக்காயர் தலைமையில் இங்கு ஒரு பொதுக் கூட்டம் நடைபற்றது. கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது:-

"இந்திய சர்க்காரோடு பேச்சுவார்த்தை நடத்தி, பிரெஞ்சு சர்க்கார் உடனடியாக இந்தியாவிலிருந்து வெளியேறுவிடால் பிரெஞ்சு இந்திய மக்கள் தங்களது அரசியல் விடுதலைக்காகவும் இந்திய யூனியனில் பிரெஞ்சு இந்தியப் பிரதேசங்கள் இணைக்கப்படுவதற்காகவும் சுதந்தர தினமான ஜனவரி 28-ம் தேதியிலிருந்து வேண்டிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

பிரெஞ்சு சர்க்காரின் அடக்கு முறையைக் கண்டித்து மற்றொரு தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

சீனம்-இந்தியா கலாச்சாரத்தொடர்பு

சாந்திநிகேதனுக்கு சீனத் தலைவர் மரியாதை

கல்கத்தா, டிச. 28

சீன-இந்தியா கலாச்சாரத் தொடர்பைப் பலப்படுத்தியதைப் பாராட்டி மரியாதையளிக்குமுகத்தான், சீனக் குடியரசுத் தலைவர் சாந்திநிகேதன் விசுவபாரதியின் பொதுக் காரியதரிசியும், கவி ரவீந்திரநாத் தாகூரின் புத்திரருமான ரதீந்திரநாத் தாகூருக்கும், கல்கத்தா சீனக் சமூகத்தின் காரியதரிசி பிராணு ப்ஷ சந்திர சின்வைக்கும் சீன அரசாங்கத்தின் கௌரவப் பட்டதை வழங்கியிருக்கிறார்.

இதையொட்டி கல்கத்தாவிலுள்ள சீன ஸ்தானாதிபதி ஒரு வைபவம் நடத்தி அப்பட்டத்தின் சின்னத்தை அவர்களுக்குக் கொடுப்பார்.

வெற்றி கிடைக்கும்

இந்தோனேஷியாவுக்கு காந்திஜி ஆசி

பட்டேவியா, டிச. 28

இந்தோனேஷிய குடியரசின் சனசரிப் பக்கிரிகையின் நிருபர் ஸ்ரீமதி ஹீரவதி மகாத்மா காந்தியைப் பேட்டிகண்ட போது காந்திஜி பின்வருமாறு தெரிவித்தார்:- தற்சமயம் நிலைமை தெளிவாக இல்லாதிருந்தாலும் கூடிய சீக்கிரம் இந்தோனேஷியர்களுக்கு வெற்றி கிடைக்கும். இந்தியா வெள்நாட்டார் அனுதாப ஆதரவு இன்றி தன்னந்தனியாக 80 வருட காலமாக சுதந்திரத்திற்குப் போராடியது. இந்தோனேஷியர்கள் மற்ற ஆசிய மக்களுடன் நெருங்கிய உறவை நிரதமாக ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

சென்னையில் நடைபெறும் அகில இந்திய மாதர் மகாநாட்டுக்கு விஜயம்செய்யும் இந்தோனேஷிய பிரதிநிதிகள் கோஷ்யை பாருக்கும் மகாத்மா காந்தி தையிங் கூறினர்.

சமரச நிபந்தனை

ஐக்கிய தேச பாதுகாப்பு சுவுன்சிலில் யுத்த நிறுத்த உதரவு சம்பந்தமாக மூவர் கமிஷன் சிபார்சு செய்த சமரச நிபந்தனைகளில் பெரும் பகுதியை டச்சுக்காரர்கள் ஒப்புக் கொண்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது.

அம்மை, காலரா பரவுவதை தடுக்க நடவடிக்கை

லெபனானிலும் சிரியாவிலும் எடுக்கப்பட்டுள்ளன

பாக்தாத், டிஸ. 29

லெபனானில் பரவிவரும் அம்மை நோயைக் தடுப்பதற்கு 200,000 பேர்களுக்கு போதிய அம்மை நோய் தடுப்பு மருந்து இன்று ஈராக்கிலிருந்து அனுப்பப்பட்டுள்ளது. சிரியாவில் பரவிவரும் காலரா வியாதியைத் தடுக்க உதவி புரியும்படி சுகாதார பிரதம அதிகாரி (வடஈராக் பகுதியில் உள்ளவர்) ஒரு வேண்டுகோள் விடுத்துள்ளார். சிரியா தருக்கி ஆகியவற்றுக்கு அடுத்திருக்கும் ஈராக் எல்லைகளை மூடி விடும்படி இன்று அறிவிக்கப்பட்டதுடன் மேற்கொண்டு அறிவிக்கும் வரையில் போக்கு வரத்து உணவுப் பொருள் அனுப்புவது முதலிய வைகளும் தடை செய்யப்பட்டுள்ளது.

(ராய்ட்டர்)

செவிடர் இருந்த வீட்டில் ஐந்து பிரேதங்கள்

டொரன்டோ, டிச. 29

குடும்பத்தகராறு காரணமாக சனிக்கிழமை நால்வரைச் சுட்டுக் கொன்றுவிட்டு ஒருவர் தற்கொலை செய்துகொண்டார். இச்சம்பவம் மேற்கு மொன்டரோல் பகுதியிலுள்ள ஒன்டாரியோ கம்ஸிலட்டில் நடந்துள்ளது. இக்கொலைகள் நடந்த வீட்டிலே அன்றிரவு 90 வயதான மத்தியூ பொல்லொக் என்பவர் தூங்கிறுக்கிறார். இவர் செவிடராக இருந்ததால் வீட்டில் நடந்த துப்பாக்கிப் பிரயோக சப்தத்தைக் கேட்கவில்லை.

(ராய்ட்டர்)

அ. இ. கா. க. பொருளாதார உப-கமிட்டிகள்

ஜனவரி 20ல் அறிக்கை சமர்ப்பிக்கும்

லக்ஷ்மணபுரி, டிச 26

அ. இ. கா. க. பொருளாதாரக் கமிட்டி நியமித்த மூன்று உப-கமிட்டிகள் காட்டின் பொருளாதார அபிவிருத்திக்காக ஜனவரி 20ல் தங்கள் அறிக்கைகளை சமர்ப்பிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதற்குப்பிறகு பொருளாதார கமிட்டி பெரிய, சிறிய கைத்தொழில்களை அபிவிருத்தி செய்வதற்காக ஓர் பரந்த திட்டத்தை தயாரிக்கும். இத்திட்டம் அ. இ. கா. க. கூட்டத்தில் ஏற்றுக்கப்பட்டவுடன் மத்தியமாகாண சர்க்கார்கள் இத் திட்டத்தை அமுல் நடத்தும்.

பாலஸ்தீன கலகம்

ஜெரூசலேம், டிச. 28

பாலஸ்தீனத்திலுள்ள பிரிட்டிஷ் நிர்வாகம் பாரபட்சம் காட்டுவதாக யூதர்களும் அராபியர்களுமான இருதரப்பினரும் குற்றஞ்சாட்டுகிறார்கள். வட பாலஸ்தீனத்தில் அராபியக் கைதிகள் சிறைகளைத் தகர்த்துக் கொண்டு தப்பியோடினர். ருமேனியாவிலிருந்து பாலஸ்தீனத்திற்கு 18 000 யூதர்களை ஏற்றி வரும் இரு கப்பல்களை வர வொட்டாமல் தடுக்க யூதர் சபை தீர்மானித்ததால் யூதப் புரட்சிப் படையின் மாஜி தலைவர் டாக்டர் ஸ்டேசபையிலிருந்து ராஜினாமாச் செய்து விட்டார். 700 யூதர்களை ஏற்றி வந்த பிரிட்டிஷ் கடற்படையினர் இன்று துறைமுகம் கொண்டு வந்து சேர்த்தார்கள்

அக்கோ சிறைச்சாலையிலிருந்து தப்பியோடிய அராபியக் கைதி பிரிட்டிஷ் ராணுவ வீரரைக் காலால் உதைத்துக் கொன்றான். ஜெரூசலேமில் ரோமன் பகுதியில் யூதர்கள் தாக்கியதால் 8 அராபியர் கொல்லப்பட்டனர். 10 அராபியர் காயமடைந்தனர்.

வஜிரிஸ்தானில் பாகிஸ்தான் ராணுவங்கள்

காவி செய்யப்பட்டு விட்டன

கராச்சி, டிச. 29

ராள்மக், கார்டயின், டாபல் ஆகிய கோட்டைகளிலும் மற்றும் எதிர்ப்பு நிலையங்களிலும இருந்த பாகிஸ்தான் இராணுவங்கள் திரும்ப வாபஸ் பெறப்பட்டு விட்டனவென்று ராவல் பிண்டியிலுள்ள பாகிஸ்தான் இராணுவ தலைமைக் காரியாலயம் அறிவிக்கின்றது. மேற்கூறிய கோட்டைகள் சரித்திரப் பிரசித்திபெற்ற யுத்தங்களில் சம்பந்தப்பட்டவைகள் என்று கூறப்படுகிறது

(ராய்ட்டர்)

உலக அழிவைத் தடுக்க உபாயம்

இந்திய விஞ்ஞானிகள் கண்டுபிடிப்பார்களா?

கட்டாக், டிச. 28

நேற்று இங்கு ஆரம்பமான இந்திய விஞ்ஞானக் 'சமூகத்தின 13வது மகாநாட்டில ஒரிசா பிரதம மந்திரி எச். கே மஹதாப் பேசியபோது பின்வருமாறு தெரிவித்தார்:-

இந்திய விஞ்ஞானிகள் நாட்டில துரிதமாக அபிவிருத்தி ஏற்பட மார்க்கங்களைக் கண்டுபிடிக்க வேண்டும். விஞ்ஞானத்தால் உலக அழிவு ஏற்படாமல் விஞ்ஞானத்தால ஆக்கம் ஏற்படும உபாயங்களை இந்திய விஞ்ஞானிகள் கண்டு பிடிக்க வேண்டும். ரஷ்ய-அமெரிக்க ஆதிக்கப்போட்டி பெரியதோர் உலக-யுத்தத்தை ஆரம்பிப்பதற்கு முன் காந்திஜின் உலகசமாதான லட்சியங்களை நடைமுறையில அனுஷ்டிக்கும்மார்க்கங்களைக் கண்டுபிடித்தது உலகை ரட்சிப்பது இந்திய விஞ்ஞானிகள் கடமையாகும். இதுவரை விஞ்ஞானமானது முதலாளி வர்க்கத்திற்கும் ஏகாதிபத்தியங்களுக்கும் உதவியாக இருந்து நாசகார யுத்தங்களை உண்டாக்கிறது விஞ்ஞானத்தால சாதாரண மனிதனை பயனுறும் வழிகள் கண்டுபிடிக்கப்பட வேண்டும்.

பால் விநியோகத்துக்கு புதிய திட்டம்

வட மத்திய மாகாணத்தில் கொண்டுவர ஏற்பாடு

அநுராதபுரம், டிச. 29

பால்விநியோகஸ்தலங்களுக்கு இப்போது விநியோகிக்கப்பட்டுவரும் பால் மாவுக்குப் பதில் சுமார் 300 பால் விநியோக ஸ்தலங்களுக்கு பால் விநியோகிப்பதற்கான திட்டமொன்று வடமத்திய மாகாணப் பகுதியில் அதிகாரிகளின் உதவியுடன் தயாரிக்கப்பட்டுள்ளது. சமீபத்தில் இப் பகுதியில் குழந்தைகளுக்கு விநியோகிக்கப்பட்ட பாலின் தராதரம் பற்றி பலமாக கண்டனங்களை தெரிவிக்கப்பட்ட பின்னர் தான் கிராமங்களில் இம்மாதிரி ஏற்பாடுகள் செய்ய ஆலோசிக்கப்பட்டதென்று கூறப்படுகிறது. ஸ்தலங்களிலுள்ள பசுக்களைக் கொண்டு அவ்வப் பகுதிகளுக்கு பால் விநியோகிக்க ஏற்பாடுகளைச் செய்ய முதற்திட்டம் இடமளிக்கிறது. மகா முதலியார் விக்கிரமசிங்க இந்த கிராமங்களில பால் விநியோகத்தில் ஈடுபடும் பலர்களுக்கு பரிசு வழங்குவது பற்றியும் சிபார்சு செய்துள்ளார். இம்மாகாணத்தில் 85,588 கால் நடைகள், 74,666 எருமைகள், 2959 ஆடுகள் இருக்கின்றன என்று குடிஜன மதிப்பு இலாகாவின் புள்ளி விபரத்திலிருந்து தெரிகிறது.

தாயும் சேயும் வெள்ளத்தில் மூழ்கினர்

பாரிஸ், டிச. 29

அர்ச் எட்டைனி என்னு இடத்தில் லோயிர் பள்ளத்தாக்கில் இன்று ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால் அங்கிருந்த பாலம் வெள்ளத்தினால் அடித்துக்கொண்டு போகப்பட்டுவிட்டது. இப் பெருக்கிலே ஒரு தாயும் சேயும் மூழ்கிவிட்டனர். வெள்ளதகில் மூழ்கிய பல பிராயாணிகளும் பாலத்தின் மரக் கட்டைகளைப் பிடித்து தொங்கியதால் தப்பிவிட்டனர்.

[ராய்ட்டர்]

தேவை

பிரசித்திபெற்ற இந்திய மருந்துச் சாலைக்கு கொழும்பு நகருக்கு மட்டும ஒரு சோல ஏஜெண்டு தேவை. ரூ 2000/- ரொக்க டிபாசிட் கட்டக் கூடியவர்கள் மட்டும் எழுதவும்.

C/o சுதந்திரன்,
194A தட்டாரத் தெரு கொழும்பு

கலை அறிவுப்போட்டி நிர் 3
முடிவு தேதி 14-1-48

நேயர்களே!

ரொக்கப் பரிசு ரூபா 1800-00
போனஸ பரிசு 4 அனுதாபப் பரிசு 25 கொண்டதும்

பரிசுகள் கடுனிவனும் பிரகாசமான வழக்கப்படி வெகுமான எமது போட்டியில் இதுவரை நீங்கள் கலந்துகொள்ளவில்லையானால் உடனே எழுதுங்கள். நிபந்தனைகள் அடங்கிய கூப்பன் பிரதிகள் இலவசமாய் அனுப்பப்படும்

கலை அறிவுப் போட்டி நிலையம்,
மெயின் ஸ்ரீட், பருத்தித்துறை.

ஐசிங் சுகர்

இலங்கையில் முதல்தரமானது

குயின் (ராணி) மார்க்.

இப்போ எங்களுக்கு ஏற்பட்ட சில வசதிகளால் விலை மிகவும் குறைக்கப்பட்டு இருக்கின்றது.

7 ருத்தல் டின்னில் அந்தர் ஒன்றுக்கு ரூ. 160-00
28 ருத்தல் டின்னில் அந்தர் ஒன்றுக்கு ரூ. 150-00

எங்கள் ஸ்டோர் நிர். 307, செட்டியார் தெருவில் (சீ ஸ்டிரீட்) எடுத்துக்கொள்ளலாம்.

குயின் (ராணி) கன்பெக்ஷன் கம்பெனி,
861, அலுத்மாவத்தை ரோடு,
முகத்துவாரம்,
கொழும்பு.

தந்தி "Confection" 'போன்: 4511

ஈகிள் ஹவுஸ் உயர்தர தாதுசத்துகளுள்ள பானங்களுக்கு இணையற்றது

தாதுசத்துக்கள் நிறைந்த மேற்கண்ட எமது குளிர் பானங்களைக் கையிருப்பு வைத்திருக்கும்படி உங்கள் வியாபாரிகளைத் தூண்டுங்கள்:—

ஓரஞ்ச் பார்லி
லெமன் பார்லி
வைன்டோ
வைனே
வினே
பலதரப்பட்ட குளிர் பானங்கள்
பழ இரசங்கள்
டீ ஸைடர்
சம்பேன் ஸைடர்
ஸ்பெஷல் ஸைடர்

தந்தி:- "ஈகிள் ஹவுஸ்" நிர். 41, பார்பர் வீதி,
போன்:- 2193 கொழும்பு.

ஏஜண்டுகள் இல்லாத பகுதிகளுக்கு ஏஜண்டுகள் தேவை

கிங்ஸ்லியில் தினசரி மாலை 6 மணி, இரவு 9-30 மணிக்கும் சனி, ஞாயிறு மெட்னி 2-30 மணிக்கும்

என். எஸ. கிருஷ்ணன், டி. ஏ. மதுரம், டி. ஈ. வரதன், எம். எஸ. சரோஜினி, எம். ஆர். சந்தானலக்ஷ்மி, காளி என். ரத்தினம் ஆகியோர் திறம்பட நடிக்கும்

கன்னிகா

மகத்தான
7-வது வாரம்



பார்க்கப் பார்க்க பரவசமூட்டும் பாவையர் நடனங்கள், செவிக்கினிய கீதங்கள், கண்ணுக்கினிய காட்சிகள், உள்ளங்கவரும் உயரிய நடிப்புகள் நிறைந்தது.

கிரவுன் தியேட்டர் ஸ்கின்னர்ஸ் ரோடு, மருதானை.

தினசரி மாலை 6-15, இரவு 9-30 மணிக்கும், சனி, ஞாயிறு மெட்னி 2-30 மணிக்கும்

சித்ரகலாவின் உன்னத தயாரிப்பு

முதல் நம்பர் நடிகர்கள் எடிஜெயமான, ருக்மணி தேவி மற்றும் பலர் நடிக்கும்

'இழந்த உறுதி'

என்னும் வர்ணம் தீட்டப்பட்ட முதல் சிங்களப் படம்

புதிய இயந்திர அமைப்புகளுடன் இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!

சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட்டிற்காக, 1947-ம் வருஷம் டிசம்பர் மாதம் 31-ம் தேதி இப்பத்திரிகை 194 ஏ, தட்டாரத்தெரு, கொழும்பு சுதந்திரன் அச்சுக்கந்தோரில் அச்சிட்டு கொழும்பு மெயின்ஸ்டிரீட்டில் இருக்கும் சிங்காரம் கடராசர அவர்களால் வெளியிடப்படுவது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org